21st April 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 27 | பக்கங்கள் - 12 | editor.uthayam@gmail.com





# ஈரான் ஜனாதிபதியின் இலங்கை விஜயம் உறுதி

- மத்தளையூடாக புதனன்று வருகை
- 18 மணி நேரமே தங்கியிருப்பார்
- இறுதிக் கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் பூர்த்தி

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதல்கள் இடம்பெற்றுள்ள போதும் திட்டமிட்டபடி ஈரான், இஸ்லாமியக் குடியரசின் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி 18 மணி நேர விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் புதன்கிழமை இலங்கை வரவுள்ளார்.

ஈரான் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட பலநோக்குத் திட்டத்தை திறந்து வைப்பதற்கு ஏற்கனவே திட்டமிட்டபடி

02ம் பக்கம்பார்க்க...

## பிராந்திய மோதலாக மாறுமா இஸ்ரேல் ஈரான் யுத்தம்?

(சிறப்பு செய்தியாளர் எம்.என். முஹம்மட்)

பலஸ்தீனப் போராட்டம் பல வடிவங்களை எடுத்துள்ளதை அவதானிக்க கூடியதாக உள்ளது.குறிப்பாக ஹாஷாவில் கட்டுப்படுத்தப்பட்ட யுத்தம் பரந்த அளவில் பிராந்திய அளவில் நாடுகளில் பரவியிருப்பது உலகத் தலைவர் பெரிதும் கவலைக்குள்ளாக்கியது. குறிப்பாக ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதலின் இஸ்ரேல், டமஸ்கஸ்,ஈரான் தூதுவராலயத்தில் தாக்குதலின் பின் ஈரானும், இஸ்ரேலும் எந்த நேரத்திலும்

02ம் பக்கம்பார்க்க...

## மின்சாரம், பயிர்ச்செய்கை, குடிநீர் மூன்றுக்கும் பயன்படும் உமா ஓயா திட்டம்

உமா ஓயா திட்டத்தில்

02ம் பக்கம்பார்க்க...

## ஜனாதிபதி தேர்தலில் போட்டி பற்றி மே தினத்தன்று ரணில் விஷேட அறிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாரா என்று பலத்தரப்பிலும் எழுப்படும் கேள்விக்கு எதிர்வரும் மே மாதம் நடைபெறும் ஐக்கிய தேசியக் கட்சியின் மேதின விழாவின் போது ஜனாதிபதி பதிலளிப்பார் என ஐ. தே. க தரப்பு தெரிவிக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடுவது பற்றி இதுவரை உறுதியாக

03ம் பக்கம்பார்க்க...

## கார் பந்தய விபத்தில் என்மர் பலி; 21பேர் காயம்




தியத்தலாவையில் இடம்பெற்ற மோட்டார் பந்தய போட்டியின் இடையே ஏற்பட்ட விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

பந்தயத்தின் போது கார்

02ம் பக்கம்பார்க்க...

## சு.க பதில் தலைவராக விஜயதாஸ ராஜபக்ஷ



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நிதியமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ தெரிவாகியுள்ளார்.

ஞாயிறு அன்று

03ம் பக்கம்பார்க்க...

## ஹஜ் கோட்டாக்கள் ரத்து உயர் நீதிமன்றில் விரைவில் மனு

### சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா

ஹஜ்குழு முகவர் நிலையங்களிற்கு பகிர்ந்தளித்த ஹஜ் கோட்டாவுக்கு தடை விதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

05ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## பிராந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதலும் ஏற்படலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. என்றாலும் அமெரிக்கா, துருக்கி போன்ற நாடுகளின் ஊடாக ஈரானை கட்டுப்படுத்துவதற்கு பெரும் முயற்சி செய்து வருகின்றது. இன்னொரு பக்கம் இஸ்ரேலின் நேரடியாக அமெரிக்காவை கட்டுப்படுத்த முயற்சி செய்கின்றது. இந்த நிகழ்வுகளை பார்க்கின்றபோது சில காலங்களுக்கு இந்த இரு முயற்சிகளும் சாத்தியப்பட்டாலும் மிகக் கிட்டிய எதிர்காலத்தில் முயற்சியில் எல்லாம் தோல்வியடையும் அரசியல் யுத்த சூழ்நிலையே காணப்படுகின்றது. குறிப்பாக ஈரானுடைய மிக நுணுக்கமான தாக்குதல் இஸ்ரேலை மாத்திரமின்றி அமெரிக்கா உட்பட மேலைத்தேய நாடுகளையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கின்றது. இன்னொரு பக்கம் ஈரான் மறைமுகமாகவும்,நேரடியாகவும் இஸ்ரேலின் மீது பல தாக்குதல்களை நடத்தி வருகின்றது. குறிப்பாக லபடானில் இருந்து இஸ்புல்லாக்கினும் ஊடாகவும் சிரியாவிலிருந்து பூச்சிகள் மூலம் ஈரானில் காணப்படும் முகாம். அகமுதில் இஸ்லாம் என்று சொல்லக்கூடிய அமைப்பின் ஊடாகவும் அதேபோன்று இன்னும் பல குழுக்கள் ஈராக்கில் காணப்படுகின்றது. ஒவ்வொருதர் மூலமாக ஹாசாவிலும் ஈரானுக்கு சார்பான இயக்கங்கள் காணப்படுகின்றன. இந்த நிகழ்வுகளை பார்க்கின்ற போது இஸ்ரேலைப் பொறுத்த மட்டில் ஈரானுக்கு ஏதாவது வழி செய்துவிட வேண்டும் என்பதில் ஸ்ரேல் கவனமாக இருக்கின்றது.

இந்த நிலைமையில் இந்த தாக்குதல் தொடர்பாக பல அரசியல் அவதானிகள் கிட்டிய எதிர்காலத்தில் இது ஒரு பிராந்தியப் போராக மாறி உலகளாவிய பொருளாதார சக்தி நெருக்கடியை தோற்றுவிக்கும் என்றும் பல்லாயிரக்கணக்கான மக்கள் யுத்தங்களால் உயிரிழக்க வேண்டிய நிலைமை கூட ஏற்படலாம் என்றும் எதிர்வு கூறி இருக்கின்றனர்.உலகத் தலைவர் பல நேர்மையுடனும் இந்த சிக்கலான நிலைமையிலிருந்து காப்பாற்றுவதற்காக முயற்சி செய்கின்ற போது தான் தோன்றித்தனமாக ஹாஷாவில் தோல்வியை விரும்புவதாக இஸ்ரேலின் தோல்வி காணப்படுகின்றது.

இன்னொரு பக்கம் தற்பொழுது கடைசியாக ஈரான் மீது நடந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் பொறுப்பேற்கவில்லை. அதேபோன்று ஈராக்கில் உள்ள பொப்பியுலஸ் பொன்ட் என்று சொல்லக்கூடிய ஈரான் சார்பு மலேசியன் இந்தியாவின் மீது நடந்த தாக்குதலுக்கு யாரும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. இப்பொழுது பிராந்திய நாடுகளில் பொறுப்பேற்காத தாக்குதல் நடப்பதற்கு ஆரம்பித்துள்ளன.இது உண்மையில் உலக மகா யுத்தத்துக்கு முன்னுள்ள பிரச்சனையாகும். மிகவும் ஆபத்தான நிலையாக உலக ராணுவ ஆய்வாக காட்டுகின்றார்கள். இவ்வாறு பொறுப்பேற்காத தாக்குதல் யார் காரணம், யாரை அடிப்பது, எந்த வழியில் இருந்து தாக்குதல் நடத்துவது என்பதை ஐஎெநளவபயவந பண்ண முடியாத அளவிற்கு இந்த தாக்குதல்கள் நடந்து வருகின்றது.குறிப்பாக ஈரான் அல்லது துருக்கி இவ்வாறான தாக்குதலை எதிர்காலத்தில் இஸ்ரேல் மீது நடத்துவதற்கும் அமெரிக்க இலக்குகள் மீது நடத்துவதற்கும் நிறையவே சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இன்னொரு பக்கம் அரபுநாடுகள் தங்களுடைய ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதில் மிகப்பெரிய சிரமத்தை எதிர் நோக்குகின்றன. குறிப்பாக ஜோர் தான் மன்னர் கடுமையாக அதிருப்தி மக்களால் மாத்திரமன்றி அரபு நாட்டு மக்களால் உள்ளீர்க்கப்பட்டுள்ளது. இந்த அதிருப்தி நிலைமை அரபு நாடுகளின் ஒரு ஸ்தீரமின்மையை உருவாக்கலாம் என்று இரகசிய ஆய்வுகள் குறிப்பிடுகின்றார்கள்.

இது எல்லாவற்றிற்குமிடையில் ஹஷாட்,மொஷாட்,ஊஜனு எகிப்திய உளவுப்பிரிவு பல கட்டடப் பேச்சுவார்த்தை நிரந்தர தீர்வு நோக்கி நடைபெற வேண்டுமென்ற ஹமாசின் நிலைப்பாட்டை தளத்துவதற்காக கடும் முயற்சி நடைபெற்றாலும் ஹமாஸ் உறுதியாக ஒரு நிரந்தர

யுத்த நிறுத்ததிற்கும், தற்காலிகமாக யுத்த நிறுத்ததிற்கு உடன்பட முடியாதென்று தெரிவித்துள்ளது. இன்னொரு பக்கம் ஹமாஸ் தலைவர்கள்.இஸ்மையில் ஹல்பா, ஹால மிசன் போன்ற மிக முக்கியத் தலைவர்கள் துருக்கிக்கு விஜயம் செய்து துருக்கி ஜனாதிபதி பர்தீக் கானுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.குறிப்பாக தற்போது கத்தாரில் காணப்படக்கூடிய தலைமையகத்தை துருக்கி மாற்றுதல் அதே போன்று துருக்கியுடைய தொடரான உதவிகளை ஹமாஷ ிற்கு பெற்றுக் கொள்ளுதல் குறிப்பாக தற்பொழுது நடைபெறுகின்ற யுத்த நிறுத்த பேச்சு வார்த்தைகள் துருக்கியினுடைய மத்தியஸ்தை ஹமாஸ் வழி நடத்துகின்றது. துருக்கி அதிபர் தசப் இந்தோகாணும் ஹமாஷினுடைய நிரந்தர தீர்வு அல்லாத வேறெந்த தீர்வும் எடுக்க முடியாது என்பதை துருக்கிய ஊடகங்கள் செய்தியெழுப்புகின்ற அரேபியரை தங்களது ஊடகங்கள் அதாவது நீர் மத்தியஸ்தம் வகிப்பது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனர்.அநேகமாக மிகக் கிட்டிய எதிர்காலத்தில் துருக்கிக்கும் இஸ்ரேலுக்குமான எதிர்காலத்தை உறுதிப்படுத்தப்படுகிறது.குறிப்பாக இஸ்ரேலிய வெளிவிகார அமைச்சர் காரசாரமாக சாடியுள்ளது.35,000 மக்களை கொலை செய்த கொம்பர் என இஸ்ரேல் வர்ணித்திருப்பது எதிர்காலத்தில் இஸ்ரேலுக்கு விரிசலை உருவாக்கும்.இஸ்ரேல் பெருமளவிற்கு எரிசலை நோக்கி நகர்வின் காரணமாக இந்த நிகழ்வுகளை பார்க்கின்ற போது பிராந்தியம் ஒரு மிகச் சிக்கலான யுத்ததிற்குள் மாட்டி உலகளாவிய பொருளாதார பற்றி அரசியல் நெருக்கடி யதார்த்தமாக ஒரிரு வருடங்களில் கொள்ளலாம் என கட்டிக் கூறுகின்றது.

## ஈரான்....

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியும், உயர்மட்டத் தூதுக் குழுவும் மத்தளை விமான நிலையத்தின் ஊடாக இலங்கை வரவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

புதனன்று காலை தெஹிரானில் இருந்து விசேட விமானம் மூலம் மத்தளை வரும் ஈரான் ஜனாதிபதி அங்கிருந்து நேரடியாக உமா ஓயாத் திட்டத் திறப்பு விழாவிற்கு செல்லவுள்ளார்.

அதன் பின் ஈரானிய உயர்மட்டத் தூதுக் குழுவினர் நேரடியாக இலங்கைத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக கொழும்பிற்கு வரவுள்ளனர். ஜனாதிபதி இப்ராஹிம் ரைசின் தூதுக்குழுவில், அவரது மனைவி மற்றும் மகளும் இடம்பெறவுள்ளார்கள். 2010ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட உமா ஓயாத் திட்டத்திற்கு ஈரான் 529 மில்லியன் டொலர் வழங்கியுள்ளது. ஈரானின் இஸ்பஹான் பிரதேசத்திற்கு இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து ஈரான் ஜனாதிபதியின் விஜயம் இடம்பெறுமா?, இல்லையா? என்ற பதற்ற நிலையிலே ஈரான் ஜனாதிபதி வருவது உறுதியாக இருப்பதாக கொழும்பிலுள்ள ஈரானிய தூதுவராலய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜனாதிபதியும் அவரது தூதுக்குழுவும் கொழும்பில் பல நிகழ்வுகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஜனாதிபதியின் மனைவியும், மகளும் முஸ்லீம் மற்றும் ஏனைய மகளிர் அமைப்புகளையும் சந்தித்து பேசவுள்ளதாக ஈரானிய தூதுவராலயம் தெரிவித்தது. புதன் அன்று இரவு ஈரான் ஜனாதிபதி விருந்துபசாரம் அளிக்கவுள்ளார்.

இது தவிர ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஈரான் ஜனாதிபதியும் உயர்மட்ட பேச்சு வார்த்தைகளில் ஈடுபடவுள்ளார்.

ஈரான் ஜனாதிபதி மத்தளை ஊடாகவே திரும்பச் செல்லவுள்ளார்.

உமாஓயா அபிவிருத்தித் திட்டப் பணிக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்ட நீர்பாசன அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி ஈரான் ஜனாதிபதியின் வருகையை உறுதிப்படுத்தியுள்ளார்.

## கார்....

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று பந்தைய திடலை விட்டு விலகி பார்வையாளர்கள் மீது மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் சுமார் 21 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மின்சாரம்....

(முன் பக்கத் தொடர்ச்சி)

அணைகளுடன் கூடிய இரண்டு நீர்த்தேக்கங்களில் நீரைச் சேமித்து 23 கி.மீ சுரங்கப்பாதை மூலம் நிலத்தடியில் அமைந்துள்ள இரண்டு விசையாழிகளுக்கு கொண்டு வந்து 120 மெகாவோட் கொள்ளளவு கொண்ட நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்து தேசிய மின் தொகுப்பில் சேர்ப்பது அடங்கும்.

மின்சார உற்பத்தியின் பின்னர், 20,000 ஏக்கர் பழைய மற்றும் புதிய நெற்பயிர்களுக்கு யால மற்றும் மஹா பயிர்ச்செய்கை பருவங்களில் நீர் வழங்குவதன் மூலம் மூன்று நீர்த்தேக்கங்களுக்கு நீர் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. நீர்ப்பாசனத்திற்கு அப்பால், பதுளை, மொனராகலை மற்றும் பண்டாரவளை மாவட்டங்களில் வசிக்கும் மக்களின் குடிநீர் தேவையை இந்த திட்டம் பூர்த்தி செய்கிறது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், தெஹ்ரானுக்கான தேயிலை ஏற்றுமதி மூலம் கச்சா எண்ணெய் இறக்குமதிக்கான பாக்கியாக 251 மில்லியன் அமெரிக்க டாலர்களை இலங்கை சமீபத்தில் செலுத்தியது. அமெரிக்கத் தடைகளை முறியடிக்காமல், தேசிய ஈரானிய எண்ணெய் நிறுவனத்திற்கு அரச நிறுவனமான சிலோன் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் செலுத்த வேண்டிய மரபு எண்ணெய்க் கடனுக்கு எதிராக ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதியை ஈடுசெய்யும் ஒப்பந்தத்தில் 2021 டிசம்பரில் இலங்கை கையெழுத்திட்டது.

பண்டமாற்று வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இதுவரை 20 மில்லியன் டொலர் பெறுமதியான தேயிலை ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை பிரதமர் தினேஷ் குணவர்தனவின் அலுவலகம் ஈரானிய வெளிவிவகார அமைச்சர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹியனுடனான பேச்சுவார்த்தையின் பின்னர் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.




# பலஸ்தீன் காஸா சிறார்களுக்கான நிதி சேகரிக்கின்ற அரசாங்கத்தின் திட்டத்திற்கு பேருவளை மக்களின் பூரண பங்களிப்பு

(பீ.எம்.முக்தார்)

பலஸ்தீன் காஸா சிறார்களுக்கான நிதி சேகரிக்கின்ற இலங்கை அரசாங்கத்தின் திட்டத்திற்கு பேருவளை சீனன்கோட்டை மக்களினதும் பூரண பங்களிப்பினை பெற்றுக் கொடுக்க சீனன்கோட்டை பள்ளிச் சங்கம் முடிவு செய்துள்ளது.

சீனன்கோட்டை இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர் சங்கத்துடன் இணைந்து பாரிய நிதித் தொகையை சேகரித்து வழங்குவதற்கு உத்தேசித்துள்ளதுடன் நிதி சேகரிப்பதற்காக ஆறு பேர் கொண்ட குழுவொன்றையும் பள்ளிச் சங்கம் நியமித்துள்ளதாக பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம்.எம்.எம்.சிஹாப் தெரிவித்தார்.

பள்ளிச் சங்க தலைவரும் ஜாமியா நளீமிய்யா கலாபீட உப தலைவருமான ஏ.எச்.எம்.முக்தார் ஹாஜியாரின் வழிகாட்டலின் கீழ் நிதி சேகரிப்பதற்காக யுஸ்ரி உவைஸ், பஸ்லி மர்ஸூக், அல் –ஹாஜ் மிஷ்கர் முனவ்வர், அஸ்ஜத் பவ்ஸ், அஷ்கர் அலி முபாரக், சிராஸ் ஹனபி ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.



அதே வேலை சீனன் கோட்டை பெரேரா வீதி மற்றும் நவ்பல் ஜாபிர் மாவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இளம் சிறார் குழுவொன்று 20ஃ4ஃ2024 காலை முதல் பிற்பகல் வரை பிரதேசத்தில் உள்ள வீடுகளுக்கு சென்று காஸா சிறார்களுக்காக நிதி சேகரிப்பில் ஈடுபட்டனர்.

புனித ரமழான் பெருநாள் தினத்தில் தனக்கு அன்பளிப்பாக கிடைத்த நிதியை சிறார்கள் தியாக உணர்வோடு இந்த நிதி சேகரித்த சிறார்களிடம் ஒப்படைத்தனர்.



பிரதேச வாழ் மக்கள் மிக உற்சாகத்தோடு தம்மால் முடிந்த நிதியை ஒப்படைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.இந்த சிறுவர் குழுவினரால் சேகரிக்கப்படும் நிதித் தொகை சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட வுள்ளது.

இந்த சிறுவர்களின் துணிச்சல் மிகு செயலை அனைவரும் பாராட்டியதோடு பிரதேச சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் மிக ஆர்வத்துடன் நிதி உதவி வழங்கி அவர்களை உற்சாகப்படுத்தினர்.

சீனன்கோட்டை வாழ் மக்கள் சுனாமி,வெள்ளம், மண்சரிவு,சூறாவழி போன்ற இயற்கை அனர்த்தங்களின் போதும் கொரோனா நோய் மற்றும் வன் செயலினால் பாதிக்கப்பட்டோருக்கும் அவ்வப்போது இன,மத,மொழி, பிரதேச வேறுபாடுகளின்றி நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் உதவி செய்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அந்த அடிப்படையில் இஸ்ரேலின் கண்மூடித்தனமான தாக்குதலினால் பாதிக்கப்பட்டுள்ள பலஸ்தீன காஸா சிறார்களுக்காக அரசாங்கம் தொடங்கியுள்ள நிதி சேகரிப்பு திட்டத்திற்கும் சீனன் கோட்டை மக்களின் முழுமையான பங்களிப்பை பெற்றுக் கொடுக்க பள்ளிச் சங்கம் முன்வந்துள்ளது.

பெரேரா வீதி மற்றும் நௌபர் ஜாபிர் மாவத்தையைச் சேர்ந்த சிறுவர் குழுவினர் வீடு வீடாகச் சென்று நிதி சேகரிப்பில் ஈடுபட்ட போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

## சு.க....

(முன் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற கட்சி அகில இலங்கை செயற்குழு கூட்டத்தில் தெரிவு இடம் பெற்றுள்ளது. நீதிமன்ற கட்டளையை அடுத்து தலைமைப் பதவியில் பணி புரிவதற்கு கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேனவிற்கு தடை விதித்த நிலையில் இக்கூட்டம் நடைபெற்றிருந்தது. நீதியமைச்சர் பதில் தலைவராக தெரிவு செய்வதற்கு இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இவரே ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் நிமல் ஸ்ரீபாலடி சில்வா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.இப்போது கட்சிக்குள்ளே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு இரு பதில் தலைவர்கள் தெரிவாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி....

(முன் பக்கத் தொடர்ச்சி)

எதுவும் தெரிவிக்கப்படவில்லை. எதிர்க்கட்சி தரப்பில் ஐக்கிய மக்கள் சக்தி தரப்பில் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட மாட்டார் என்று கூறி வருகின்றார்கள்.

இந்தப் பிண்ணயில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாரா என்பது பற்றி மே மாதத்தில் மேதினக் கூட்டத்தில் அறிவிப்பார் என கட்சி வட்டாரங்களில் தெரிவித்துள்ளனர்.

இம்முறை ஐ.தே.க. மேதினக் கூட்டத்திற்கு 1 இலட்சத்திற்கும் மேற்பட்டோரை அழைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.






www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 APRIL 21 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# ஈரான் இலங்கை உறவை பலப்படுத்தும் ஈரான் ஜனாதிபதி விஜயம்

இலங்கையின் பின் தங்கிய மாகாணங்களில் ஒன்றான ஊவா மாகாணத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உமா ஓயா பலநோக்குத் திட்டம் எதிர்வரும் 24ம் திகதி பொது மக்களுக்கு கையளிக்கப்படவுள்ளது. ஈரான், இஸ்லாமிய குடியரசின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள இத் திட்டத்தை மக்களுக்கு கையளிப்பதற்காக ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைஷி இலங்கை வரவுள்ளார்.ஈரான் இஸ்லாமியக் குடியரசின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட திட்டத்தை மக்களுக்கு கையளிப்பதற்காகவே ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி இலங்கை வரவுள்ளார். ஈரான் இஸ்லாமியக் குடியரசின் நிதியுடன் இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத் திட்டத்தின் மூலம் 120 மெஹா வோல்ட் மின்சாரம் தேசிய மின்சார விநியோகத்துடன் இணைக்கப்படவுள்ளது15000 ஏக்கர் வயல்களுக்கு பெரும்போகம், சிறுபோகத்துக்கு தேவையான நீரை இத்திட்டம் வழங்கவுள்ளது. உமா ஓயா பலநோக்குத் திட்டம் 2011ம் ஆண்டு அப்போதைய ஈரான் ஜனாதிபதி அகமதி நஜாத் மற் றும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்க்ஷ ஆகியோரால் அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது.பூரணப்படுத்தப்பட்ட இத் திட்டத்தை ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவும் திறந்து வைக்கவுள்ளனர். பதுளை மொனராகலை மாவட்டத்தில் நீண்டகாலமாக இருந்து வரும் குடிநீர் பிரச்சனை இத் திட்டம் தீர்வு வழங்கவுள்ளது.வடகிழக்கு யுத்த காலத்தில் இலங்கை பாரிய நிதி நெருக்கடியை எதிர் நோக்கிய போது இலங்கைக்கு ஈரான் விற்பனை செய்து விட்டு பணத்தை திருப்பி கையளிக்கும் ஏற்பாட்டின் கீழ் பல வருடங்களாக எரிபொருளை வழங்கியது. உடன்படிக்கை படி இலங்கை ஈரானுக்கு இன்னும் பணத்தை திருப்பி செலுத்த வேண்டியிருக்கின்றது . யுத்த காலத்தில் ஈரான் வழங்கிய இந்த உதவியானது மிக மிகப் பெறுமதி மிக்கது.இந்த உதவி மூலம் பலமான இலங்கை ஈரான் உறவு உமா ஓயாத் திட்டத்திற்கு உதவியதன் மூலம் மேலும் பலமானதாகியது. இந்தப் பிண்ணயில் ஈரான் ஜனாதிபதியின் இலங்கை விஜயம் ஈரான் இலங்கை உறவை மேலும் பலப்படுத்துவதாக அமையும். ஈரான் இஸ்லாமியக் குடியரசு இத் திட்டத்திற்காக 550 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

உமா ஓயாத் திட்டத்திற்கு ஈரான் வழங்கும் உதவியானது ஈரான், இஸ்லாமியக் குடியரசிற்கும் இடையிலான உறவினை ஒருசிறப்புஅடையாளமாகமாற்றஇத்திட்டம்அமைந்துள்ளது. உமா ஓயா திட்டத்திற்கு வழங்கிய உதவி மூலம் மேலும் பலமாகியது. இந்தப் பிண்ணனியில் ஈரான் ஜனாதிபதியின் இலங்கை விஜயம் ஈரான், இலங்கை உறவுகளை மேலும் பலப்படுத்துவதாக அமையும். முஸ்லீம் உலகில் பலமான நாடான ஈரான் இலங்கைக்கு வழங்கிய உதவி இரு நாடுகளின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பதியப்படுவது நிச்சயம். மேற்கு ஆசியாவில் நிகழும் யுத்த சூழ்நிலைக்கு மத்தியிலும் தனது விஜயத்தை ஈரான் ஜனாதிபதி தொடர இருபது எல்லாக் கட்டத்திலும் ஈரான் இலங்கையின் நண்பராக இருப்பதை உறுதிப்படுத்துவதாக அமைகிறது

# நான் ஜனாதிபதியானால் பெண்களுக்கான விசேட ஜனாதிபதி செயலணி உருவாக்கப்படும்

## மட்டக்களப்பு பெண்கள் மாநாட்டில் சஜித் சூளுரை

இந்த வருட இறுதிக்குள் எமது ஆட்சியில் பெண்களுக்கு பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்க இருக்கிறோம். பெண்கள் சக்தியை அதிகரித்து வலுவூட்டி, பெண்கள் பங்களிப்பை வழங்கக் கூடிய திட்டங்களை இந்த வருட இறுதிக்குள் முன்னெடுப்போம்.

ஐக்கிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் மாநாடு (20) மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இடம்பெற்றது.

மட்டகளப்பு மாவட்டம் உட்பட நாடளாவிய ரீதியிலான பெண் தலைமைத்துவ குடும்பங்களை வலுவூட்ட விசேட திட்டங்களை முன்னெடுப்பேன். ஏனைய மாவட்டங்களைப் போலவே மட்டக்களப்பு மாவட்ட பெண்களும் நுண் நிதி கடன் வசதிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நுண் நிதி கடன் பொறியில் இருந்து பெண்களை விடுவிக்கும் விசேட திட்டங்களை எமது ஆட்சியில் முன்வைப்போம்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் கீழ் 14 பிரதேச செயலகங்கள் இருக்கின்றன. இந்த பிரதேச செயலகங்கள் ஊடாக பெண்களுக்கான சுய தொழில் முயற்சியாண்மைகளை ஏற்படுத்தி கொடுப்பது எனது நோக்கமாகும். நாட்டில் வறுமை அதிகரித்துச் செல்லும் போது மட்டக்களப்பு மாவட்டத்திலும் இந்த வறுமை அதிகரித்து காணப்படுகிறது. எமது ஆட்சியில் வறுமை ஒழிப்புக்கான சமூக நலன்புரி திட்டங்களை பெண்களுக்கும் வழங்கி சமுதாய மட்டத்தில் இந்த வறுமையை நீக்க நடவடிக்கை எடுப்போம்.

ஏற்றுமதி உட்பட ஐந்து முக்கிய விடயங்களை முன்னெடுக்க உத்தேசித்துள்ளோம்.

நெசவுத் தொழில் ஈடுபட்டு வரும் நெசவாளர்களின் முக்கிய பிரச்சினை இந்தியாவில் இருந்து உற்பத்திக்கான நூலை அதிக விலை கொடுத்து எடுத்து வர வேண்டும். சரியான விலை இல்லாத போது கறுப்புச் சந்தையில் அதிக விலை கொடுத்து நூலை கொள்வனவு செய்யும் நிலை இருந்து வருகிறது. இந்த பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத் தருவோம்.

நளின் பண்டார அவர்கள் கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சராக பதவி வகித்த போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலகங்களையும் மையமாகக் கொண்டு ஏற்றுமதி மையங்களை ஆரம்பித்தார். அந்த திட்டத்தை நாம் எமது ஆட்சியில் மீண்டும் முன்தொடர்வோம்.

நுண், சிறிய, நடுத்தர புதிய தொழில்



முனைவோரை உருவாக்கும் திட்டத்தை முன்னெடுக்க இருக்கிறோம். எமது 10 இலட்சம் புதிய தொழில் முனைவோரை உருவாக்கும் திட்டத்தில் பெண்களுக்கு கூடிய முக்கியத்துவதும் முன்னுரிமையும் வழங்க எதிர்பார்கிறோம்.

பெண்களுக்கான உரிமை, சமூக உரிமை மற்றும் பெண்களுக்கான அரசியல் உரிமைகளை வழங்க நடவடிக்கை எடுப்போம். நான் ஜனாதிபதியாக வந்தால் பெண்களுக்கான விசேட ஜனாதிபதி செயலணி ஒன்றினை ஸ்தாபிப்பேன். இலங்கையில் 52மூ அதிகமாக பெண்கள் இருக்கின்றனர். இது அதிக எண்ணிக்கையாகும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு மாத்திரமே பெண்களுக்கான 25மூ ஒதுக்கீடு இருக்கிறது. எனது ஆட்சியில் மாகாண சபைகளுக்கும் பாராளுமன்றத்திற்கும் பெண்களுக்கான 25மூ ஒதுக்கீட்டை வழங்குவேன் என உத்தரவாதம் வழங்குகிறேன். இந்நாட்டுள்ள 314 பிரதேச செயலகங்களிலும் பெண்களை வலுவூட்டக் கூடிய மத்திய நிலையங்களை உருவாக்க நான் தயாராக இருக்கிறேன். அவ்வாறு இந்த திட்டத்தை ஆரம்பிக்கும் போது மட்டக்களப்பு மாவட்டத்திற்கு நான் மீண்டும் வருவேன்.

மட்டக்களப்பு தொடர்பில் பேசும் போது குறிப்பாக மயிலத்தமடு மேய்ச்சல் தரை தொடர்பாக பேச வேண்டும். பல ஆட்சியாளர்கள் இங்கு வருகிறார்கள், இது குறித்து பேசுகிறார்கள். இந்த வருட இறுதிக்குள் எமது ஆட்சியில் இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை பெற்றுத் தருவேன் என உத்தரவாதம் அளிக்கின்றேன்.

இந்த மேய்ச்சல் தரை தொடர்பாக சிறந்த உத்தரவாதம் வழங்கப்படும். இது விலங்குகளுக்கான உணவுக்கான சிறந்த இடமாக அமைந்து காணப்படுகிறது. இது மாத்திரமல்லாது மட்டக்களப்பு மாவட்டத்தில் சமயம் சார்ந்த இடங்கள்,தொல்லியல் சார்ந்த இடங்கள் முக்கிய பிரச்சினையாக இருக்கிறது.

இலங்கையில் சகல இனத்தவர்கள், மதத்தவர்கள் அனைவருமே வாழ்கிறார்கள். அனைவருக்கும் இடம் இருக்கிறது. அனைவருக்கும் சுதந்திரம் இருக்கிறது. அனைவரும் ஒன்றாக வாழக்கூடிய திட்டத்தை நாம் வழங்க வேண்டும்.எனவே இங்கு அனைத்து மதத்தினரையும் சமயத்தினரையும் ஓரிடத்துக்கு அழைத்து அனைவரும் ஒற்றுமையாக சகோதரத்துவத்துடன் வாழக்கூடிய சிறந்த சூழலை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும். இனவாத நடவடிக்கைகளுக்கு இனம் சார்ந்து, மதம் சார்ந்து இடம் கொடுக்க முடியாது. இதற்கான உத்தரவாதத்தை மட்டகளப்பு மக்கள் தருவார்கள்.

மட்டகளப்பு மாவட்டத்தில் விவசாய உற்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தேர்தல் வரும் போது பேசுவார்கள் 2024 தேர்தல் வருடமாகும். ஐக்கிய மக்கள் சக்தியிடமே இதற்கான தீர்வு இருக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பிரதேச செயலகங்களுக்கும் விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம். 76 வருட சுதந்த இலங்கையில் எதிர்க்கட்சி அரசியலில் புதிய திருப்பங்களை ஐக்கிய மக்கள் சக்தியே ஏற்படுத்தியது.

எதிர்க்கட்சியின் “மூச்சு” மற்றும் “பிரபஞ்சம்” திட்டங்கள் ஊடாக மட்டக்களப்பு வைத்தியசாலைகளுக்கும் பாடசாலைகளுக்கும் கோடிக்கணக்கான தொகையை வழங்கியுள்ளோம். ஐக்கிய மக்கள் சக்தி எந்த தரப்புக்கும் பயப்பட்ட கட்சியல்ல. ஆனால் அரசாங்கம் ஐக்கிய மக்கள் சக்திக்கு அஞ்சுகிறது. மே 1 ஆம் திகதி சர்வதேச தொழிலாளர் தினத்தை கொண்டாட நாம் கோரிய மைதானத்தை வேறு தரப்புக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஐக்கிய மக்கள் சக்திக்கு அரசாங்கம் பயப்படுகிறது. ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு பயப்படுகிறது.

அரசாங்கத்திற்கு ஒன்றை சொல்லிக் கொள்ள விரும்புகிறோம், மே தினத்துக்கான இடத்தை அரசாங்கம் கொடுத்தாலும் இல்லாவிட்டாலும் ஒரு இலட்சம் தொழிலாளர்களை கொழும்புக்கு அழைத்து வந்து மக்கள் சார் தொழிலாளர் தினத்தை, தொழிலாளர் புரட்சியை ஐக்கிய மக்கள் சக்தி கொண்டாடும். ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் உங்களுக்கு சுபிட்சமான எதிர்காலத்தை உருவாக்கித் தருவோம் என்ற உத்தரவாத்த்தை வழங்கி விடை பெறுகிறேன்.



# நானா நீயா அவனா?



சபீர் மொஹமட்

## எது உண்மை! எது பொய்!

நாங்கள் தற்போது வாழ்ந்து கொண்டிருப்பது ஒரு புதுவிதமான தகவல் யுகத்திலே ஆகும். முன்பு போல் முன் தினம் நடந்த சம்பவங்களை மறுத்தினம் பத்திரிகையில் வாசித்து தகவல்களை அறிந்து கொள்கின்ற யுகம் மாறி சமூக வலைத்தளங்களில் உடனுக்குடன் நடக்கின்ற சகல தகவல்களையும் காண்கின்ற ஒரு யுகத்திலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நோய் தொற்றுகள் அதிகமாக காணப்படுகின்ற சூழ்நிலையை'யனெநஅஉை என அழைப்பது போல் பல்வேறு பட்ட தகவல்கள் ஒன்று சேர்ந்து காணப்படுகின்ற இந்த யுகத்தை ஐகெழசனநஅஉை என ஆய்வாளர்கள் அழைக்கின்றார்கள்.

சரி, ஏன் இன்று இந்த பத்தியிலே இதைப் பற்றி எழுதுகின்றேன் என்றால் அதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல காரணங்கள் உள்ளன. கடந்த வாரம் இலங்கை சமூக வலைத்தளங்களில் அதிகமாக பேசப்பட்ட ஒரு தலைப்பு தான், பெண்களுக்கு தனியாக சுற்றுலா செல்வதற்கு உகந்த நாடுகள் பட்டியலில் இலங்கை முதலாம் இடத்தில் உள்ளது என்பதாகும். இந்த நாட்களில் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு அதிகமாக வருவது உண்மை. ஆனால் 'உலகிலேயே தனிமையாக ஒரு பெண் சுற்றுலா செல்வதற்கு உகந்த நாடு இலங்கை' என்பது கொஞ்சம் நம்ப தகுந்த உண்மையாக இல்லை. ஆனாலும் அரசாங்கத்தை புகழ்ந்து கவிதை எழுதுகின்ற பலரும் இதனை சமூக வலைத்தளங்களில் பகிர்ந்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி இருந்தார்கள். ஆனால் ஒரு சில பெண்களுக்கு 'இன்று கூட நான் பொதுப்போக்குவரத்தின் போது பேருந்திலோ அல்லது புகையிரதத்திலோ ஏதோ ஒரு வன்முறைக்கு உட்படுத்தப்பட்டேனே" என்ற கேள்வி காணப்பட்டது. அதனை அவர்கள் சமூகவலைத்தளங்களில் பகிரங்கமாகவே கேட்டும் இருந்தார்கள். ஆனால் அந்தக் கேள்விகளுக்கான பதிலாக பெரும்பாலும் காணப்பட்டது 'உனக்கு அவ்வாறு நடந்தது என்பதால் அனைவருக்கும் அவ்வாறுதான் என நீ எப்படி கூறுவது?' என்பதாகும்.

உண்மையிலேயே குறித்த செய்தி உத்தியோகபூர்வமான எந்த ஒரு சர்வதேச செய்தித்தளத்திலும் வெளியிடப்பட்டிருக்கவில்லை. சாதாரணமாக சுற்றுலா ஊக்குவிப்பு இணையதளங்கள் இதுபோன்ற தகவல்களை கூறுவார்கள். எனவே அவ்வாறு கூறிய ஒரு தகவலையே இவர்கள் உண்மையான தரவு போன்று திரிவு படுத்தி மக்களை தவறான முறையில் வழிநடத்துவதற்காக உபயோகித்துள்ளார்கள். நாங்கள் சமூக வலைத்தளங்களில் காண்கின்ற அனைத்து செய்திகளும் உண்மை அல்ல.

நேற்று 9ஆம் திகதி கொஞ்சம் பேஸ்புக்கில் செய்திகளை பார்த்துவிட்டு இரவு 9 மணி அளவில் தூங்கக்கூடிய ஒரு முஸ்லிம் குடும்பம் நிச்சயமாக இன்றைய தினம் அதிகாலையில் ஸஹர் செய்துவிட்டு நோன்பைத் தான் நோற்று இருப்பார்கள். ஏனென்றால் உத்யோகபூர்வமாக இன்றைய தினம் பெருநாள் என ஜம்இய்யத்துல் உலமா அறிவுக்கும் வரை ஏகப்பட்ட போலியான செய்திகள் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டதை நாங்கள் நேற்றைய தினம் அவதானித்தோம். அதிலே ஒரு சில செய்தி வழங்கும் தளங்கள் உண்மையை விட வேகமாக இருக்க வேண்டும் என்ற காரணத்தினால் சரியான ஆதாரங்கள் எதுவும் இன்றி "எங்குமே பிறை தென்படவில்லை. நாளை நோன்பு" என செய்திகளை வெளியிட்டு இருந்தார்கள். இதற்குப் பின்னராவது "எந்த மசூராவாக இருந்தாலும் எந்த வல செய்தியாக இருந்தாலும்" ஒன்றுக்கு பலமுறை அவர்களுடைய செய்திகள் பற்றி ஆராயுங்கள். ஏனென்றால் உண்மையைவிட அவர்களுக்கு 'நான் தான் முதலில் கூறினேன்' என்பதும் 'சமூக வலைத்தளங்களில் வைரல் ஆக வேண்டும்' என்ற நோக்கமும் மட்டுமே காணப்படுகிறது.

நாங்கள் பல வாட்ஸ்அப் குழுக்களில் இருக்கின்றோம். ஒரு நாளைக்கு பல நூறு செய்திகள் அவற்றில் பகிரப்படுகின்றன. அவற்றில் வருகின்ற எத்தனை செய்திகள் உண்மை என்பதை நீங்கள் அறிவீர்கள். ஒரு சில செய்திகள் பல ஆண்டுகளுக்கு முன்னர் பகிரப்பட்டவையாக இருக்கும். இன்னும் சில செய்திகள் இட்டுக்கட்டப்பட்ட பொய்களாக காணப்படுகின்றன. ஆனால் நாங்கள் எதையும் ஆராயாமல் அவற்றை திரும்பத் திரும்ப பகிர்ந்து கொண்டே இருக்கின்றோம். டிஜிட்டல் எழுத்தறிவு என்பது எமது முஸ்லிம் சமூகத்திடம் அறவே இல்லாத ஒரு விடயமாக காணப்படுகின்றது. ஏனென்றால் அதிகமான போலி செய்திகளை பகிர்கின்ற கூட்டத்தில் நம் முஸ்லிம்களே முதலிடத்தில் உள்ளார்கள். அது எவ்வாறு என்றால் கொஞ்சம் அந்த செய்தியில் அல்குர்ஆன் அல்லது ஹதீஸ் ஆதாரங்கள் ஏதேனும் சேர்க்கப்பட்டிருந்தால் உடனடியாக அவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றார்கள். நோன்பு காலத்தில் கூட இவ்வாறான பல செய்திகளை சமூக வலைத்தளத்தில் முஸ்லிம்கள் பகிர்வதை நாங்கள் அவதானித்தோம். நாசா விஞ்ஞானி ஒருவர் இஸ்லாத்தை ஏற்றதாகவும் புனித லைலத்துல் கதிர் இரவை அவர் ஏற்கனவே கணித்ததாகவும் ஒரு செய்தி பரவலாக பகிரப்பட்டது. ஆனால் எவருமே அந்த செய்தியின் உண்மைத் தன்மை பற்றி கேள்வி கேட்கவில்லை. பல வருடங்களுக்கு முன்பும் இதே செய்தி றுாயவளயீ சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டன. அதேபோல் நீல் ஆம்ஸ்ட்ராங் சந்திரனுக்கு சென்றார்கள் என்ற செய்தியை முஸ்லிம்கள் கண்மூடித்தனமாக நம்புவதற்கு பல பொய்களை மேற்குலகம் இட்டுக்கட்டியது. அதில் ஒன்றுதான் சந்திரனிலே 'பாங்கு' ஒலியை கேட்டதாக ஒரு பொய்யும் நீல் ஆம்ஸ்ட்ராங் கால் பதித்த இடத்திலே ஒரு மிகப்பெரிய வெடிப்பு காணப்பட்டதாக இன்னொரு பொய்யும் பரவலாக பாயிரப்பட்டது. அதாவது அல்குர்ஆனிலே குறிப்பிடப்பட்டிருப்பது போல் நபி அவர்கள் சந்திரனை இரண்டாகப் பிளந்த ஒரு சம்பவம் உள்ளது. அதனை மையமாக வைத்த இந்த பொய்யான செய்தி முஸ்லிம்கள் மத்தியில் பகிரப்பட்டது. அதனை நம்பிய எமது சமூகம் அடுத்த நாள் ஜ/ம்மா மிம்பர் முதல் புத்தகங்கள் வரை சந்திரனுக்கு சென்ற மனிதன் பற்றி பேசினார்கள்.

அல்குர்ஆனின் முதலாவது வசனம் கூட ஓதுவீராக அதாவது 'வாசியுங்கள், ஆராயுங்கள்' என உள்ளது. ஆனால் அந்த அல்குர்ஆனையே நாங்கள் சரியாக வாசிக்காமல் போலியான செய்திகளை குர்ஆன் ஹதீஸ் என்ற பெயரில் பகிர்கின்றோம். இது வெறுமனே ஒரு செய்தியாக உங்களுக்கு இருக்கலாம். ஆனால் நீங்கள் காண்கின்ற அந்த செய்தி சில சந்தர்ப்பங்களில் இன்னொருவருடைய பணத்தையோ சொத்துக்களையோ இழக்க கூடிய செய்தியாக இருக்கலாம். ஏனென்றால் போலியான வங்கி கணக்குகளை இட்டு போலியான முறையில் பணத்தை சம்பாதிக்கின்ற பலரும் எம் மத்தியில் இருக்கின்றார்கள். நாங்கள் எவருமே அவ்வாறான செய்திகளில் வருகின்ற தொலைபேசி இலக்கங்களை தொடர்பு கொள்வதில்லை. அதேபோல் பல தற்கொலைகள் கூட இதுபோன்ற போலியான செய்திகளால் ஏற்பட்டுள்ளன.

எனவே எல்லாவற்றையும் நாங்கள் அறிந்தவர்கள் என்ற மமதையை முதலில் முஸ்லிம்கள் மூட்டை கட்டி விட்டு கொஞ்சம் இந்த நவீன தொழில்நுட்பங்கள் சார்ந்த அறிவை வயது பேதங்கள் இன்றி வளர்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் தேர்தல்களில் கூட எமது மக்கள் இலகுவாக ஏமாற்றப்படுவது சரளமான போலியான செய்திகள் மூலமே ஆகும். கொஞ்சம் தொப்பியை அணிந்து அரபு மொழி கலந்த தமிழிலே பேசினால் 'நமது தலைவர்கள், நமது இனத்தை மதத்தை காக்கின்ற தலைவர்கள்' என ஏமாறக்கூடிய ஒரு சமூகமே எமது முஸ்லிம் சமூகமாகும். அந்த அரசியல்வாதிகளின் சுயரூபத்தை வாக்காளர்கள் அறிந்திருந்தால் எத்தனையோ முஸ்லிம் அரசியல்வாதிகள் இன்று அரசியலிலேயே இருந்திருக்க மாட்டார்கள்.

## கூட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*அரசாங்க ஹஜ்குழு ஹஜ் முகவர்களுக்கு பகிர்ந்தளித்த ஹஜ் கோட்டாக்களுக்கு தடை விதித்து மேல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை ரத்து செய்யக் கூறி உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யவுள்ளதாக முஸ்லிம் சமய கலாச்சாரத் திணைக்களத்தின் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா இதனைத் தெரிவித்தார்.*

*நீதிமன்றம் விடுமுறைக்குப் பின்னர் நீதிமன்ற செயற்பாடுகள் ஆரம்பமானவுடன் இந்த மனுத்தாக்கல் செய்யவுள்ளதாக அவர் தெரிவித்தார்.*

*மேல் நீதிமன்ற நீதிபதி சமரக்கோன் ஹஜ் கோட்டாக்களை ரத்து செய்து தீர்ப்பொன்றினை அறிவித்திருந்தார்.*

*இதன் காரணமாக யுனெடட் டிரவல்ஸ் நிறுவனத்திற்கு எதிராக ஹஜ்குழு நியமித்த விசாரணைக் குழு அளித்த தீர்ப்பினை ஆட்சேபித்து ஹஜ்குழு மீது இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.*

*இதன்படி ஏற்கனவே பகிர்ந்தளிக்கப்பட்ட 3,500 கோட்டாக்கள் 90 ஹஜ் நிறுவங்களிற்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.*

*அவை யாவும் இப்போது ரத்து செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக மற்ற நடவடிக்கைகள் ஸ்தம்பித்துள்ளன. நீதிமன்ற விடுமுறை காரணமாக உடனடியாக இதுகுறித்து நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் அரசாங்க ஹஜ் குழு செயற்பட்டு வருகின்றது. இந்த நிலையில் மேல் நீதிமன்ற நீதியரசர் சமரக்கோனின் தீர்மானத்தை ஆட்சேபித்து மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கான சகல ஏற்பாடுகளும் முயற்சி செய்யப்பட்டுள்ளதாகவும் நீதிமன்ற செயற்பாடுகுள் ஆரம்பமானதும் இதனை மனுச் செய்வதாகவும் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மேலும் தெரிவித்தார்.*

## அமரர் ஏ.ரீ ஆரியரத்ன நினைவாக...



*சர்வோதய அமைப்பின் இணை அமைப்பான தேசோதய சபையினரால் யாழ் சர்வோதய மாவட்ட நிலையத்தில் 23-05-2016 இல் நடைபெற்ற நிகழ்வில் , 92 வயதில் காலமாகிய சர்வோதய அமைப்பின் தலைவர் கலாநிதி ஏ.ரீ ஆரியரத்ன கலாபூஷணம் யாழ். எழுத்தாளர் பரீட் இக்பாலுக்கு பொன்னாடை அணிவிப்பதையும் "தேசோதய தீபம்" விருது வழங்கி கேடயமும் நற்சான்றிதழும் வழங்குவதையும் படத்தில் காணலாம்.*




# வரலாற்றுத் தடயத்துடன் விடைபெற்றார் நீதியரசர் அமீர் இஸ்மாயில்!

## முஸ்லிம் சமூகத்தின் பாரிய இடைவெளி!!

### சம்மாந்துறை மீடியா போரத்தின் அனுதாபம்!!

(ஐ.எல்.எம். ஜலீல் ஜீ)

சம்மாந்துறையின் முதுசம்மிக்க இலட்சினையான உயர் நீதிமன்ற நீதியரசர் அமீர் இஸ்மாயில் தனது 85 வது வயதில் இன்று காலமானார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். அன்னார் மறைந்த செய்தி (20.04.2024) எமது சமூகத்தின் புத்திஜீவிகள் வரிசையில் பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கிலங்கை வரலாற்றில் முதலாவது நீதியரசரான இவர் சம்மாந்துறை மண் பெற்றெடுத்து இன்று இழந்துள்ள அறிவுச் சுரங்கம் ஆவார்.

அன்னாரின் மரணச் செய்தி வரலாற்றுத் தடயத்தை இட்டுச் சென்றுள்ளது என்ற ஆழ்ந்த இரங்கலுடன், தனது பிரார்த்தனைகளையும், அனுதாபங்களையும் சம்மாந்துறை மீடியா போரம் தெரிவித்துக் கொள்கின்றது.

1939ஆம் ஆண்டு பெப்ரவரி 19ஆம் திகதி சம்மாந்துறையில் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை சம்மாந்துறை தாறுல் உலூம் வித்தியாலத்திலும் உயர் கல்வியை கொழும்பு உவெஸ்லி கல்லூரியிலும் தொடர்ந்தார்.

பாடசாலைக் கல்வியின் பிற்பாடு சில காலங்கள் கொழும்பிலுள்ள உயர் கல்லூரியொன்றில் ஆசிரியராக கடமையாற்றிய பின்னர் சட்டக்கல்வியை தொடர்ந்ததுடன் 1967 இல் இலங்கை சட்டக் கல்லூரியின் சட்டத்தரணி கற்கையை பூர்த்தி செய்துவிட்டு அதே ஆண்டில் உயர்நீதிமன்றத்தின் சட்டத்தரணியாகிறார்.

சம்மாந்துறையில் 1930 களில் பெயர் பூத்த பொறியியலாளராக திகழ்ந்த மர்ஹூம் இஸ்மாயில் என்ஜினியரின் இரண்டாவது மகனான இவராது கல்விப் பரப்பானது தகப்பன் வழிவென்ற சாதனைச் சிகரம் என்றுதான் சொல்ல வேண்டும்.

தியாகம், நேர்மை, கடமையுணர்வு, சமூக அக்கறை போன்ற பலதையும் அகத்தில் கொண்ட இஸ்மாயில் என்ஜினியர் 1930 களில் டீ.எஸ். சேனாநாயக்க ஆட்சிக் காலத்தில் உடைந்திருந்த பராக்கிரம சமுத்திரத்தை மீள திருத்தியமைககும் பாரிய பணியை பொறுப்பேற்று முழு முஸ்லிம் சமூகத்தினருக்கும் சான்று படைத்தார்.

நீர்ப்பாசனப் பொறியியலாளரான இஸ்மாயில் எனும் ஆளுமையான அவர் முஸ்லிம் சமூகத்தின் வரலாற்றுத் தடயத்தை சான்றூன்றினார். (இந்தத் தகவல் பொலன்னறுவ நீர்ப்பாசன அலுவலகத்தின் பதிவுப் புத்தகத்தில் உள்ளது.)

-இவ்வாறு ஆளுமை கொண்ட பொறியியலாளர் இஸ்மாயில் அவர்களின் இளைய மகனாகிய நீதியரசர் அமீர் இஸ்மாயில்,

குறுகிய கால பயிற்சியின் பின்னர் 1971 இல் இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தில் அரச ஆலோசகராக இணைந்தார். 12 ஆண்டுகள் அரச வழக்கறிஞராகவும், சிரேஷ்ட அரச வழக்கறிஞராகவும் பணியாற்றி விட்டு பின்னர் 1983 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதிபதியாக நீதித்துறையில் உள்வாங்கப்பட்டார்.

மேலும், 1983 இல் நெதர்லாந்தின் ருவசநஉாவ பல்கலைக்கழகத்தில் சர்வதேச விமானச் சட்டம் டிப்ளோமா பெற்றுள்ளதுடன், 1998 இல் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் உள்ள சட்ட அமைப்புகளின் ஆய்வு மற்றும் மேம்பாட்டிற்கான நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட முரண்பாடு தீர்த்தல் சட்டப் படிப்பையும் தொடர்ந்திருந்தார்.

உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகப் பல்வேறு நிலையங்களில் பணியாற்றிய பின்னர், 1990 இல் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியாகப் பதவி உயர்வு பெற்றார்.

தொடர்ந்தும் அவர் 1990 இல் இலங்கையின் உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக உயர்வு பெற்றார். அவர் உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்த காலத்தில் நீதிச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக பணியாற்றியதுடன், சட்டக் கல்விப் பேரவை உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டு உச்ச அடைவுகளைப் பெற்று சேவையாற்றி ஓய்வு பெற்றார்.

நீதியரசராக இருந்து ஓய்வுபெற்றதன் பின்னர் 2005 - 2010 காலப் பகுதியில் அரசியலமைப்புச் சபையின் பரிந்துரையின் பேரில் ஐந்து ஆண்டுகளுக்கு இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இவ்வாறு தனது இள வயது முதல் கல்விப் பரப்பில் விசாலமாகியிருந்து



அறிவின் கூர்மையான நீதியரசர் மர்ஹூம் அமீர் இஸ்மாயில் சம்மாந்துறை மண் பதியினதும், எமது சமூகத்தினதும் வரலாற்றுத் தடயத்தை விட்டுச் செல்லும் அன்னாரின் மறுமை வாழ்வு சிறப்புற பிரார்த்திப்பதுடன், வல்லநாயன் அன்னாருக்கு உயர் ஜென்னாஹ்வை பரிசளிப்பானாக என்றும் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் இன்று (21) சுபஹ் தொழுகையின் பின்னர் தெஹிவளை ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## இலங்கையின் சட்டவிற்பன்னர்களில் தலைசிறந்த ஒருவர் மறைந்த நீதியரசர் அமீர் இஸ்மாயில்

### அனுதாபச் செய்தியில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்



சம்மாந்துறையில் அவதரித்து, அந்த கிழக்கு மண்ணிலிருந்து இலங்கையின் உயர்நீதி மன்றத்தை அலங்கரித்த முதல் முஸ்லிம் என்ற தகைமையைப் பெற்ற மர்ஹூம் அமீர் இஸ்மாயில் இந்நாட்டு சட்ட விற்பன்னர்களில் தலைசிறந்த ஒருவராக திகழ்ந்திருக்கின்றார் என அவரது மறைவு குறித்து விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்ட முதுமாணி ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கல்லோயாத் திட்டம் ,கொழும்புத் திட்டம் ,பொலன்னறுவை பராக்கிரம சமுத்திர மீளமைப்பு போன்றவற்றில் உயரிய பங்களிப்பைச் செய்த,சிறந்த குடும்ப பின்னணியைக் கொண்ட பொறியியலாளர் (என்ஜினியர்) மர்ஹூம் இஸ்மாயிலின் இளைய வாரிசான அமீர் இஸ்மாயில் இலங்கையின் நீதித்துறையில் பல்வேறு மட்டங்களிலும் பணியாற்றியிருக்கின்றார்.

தலைநகர் கொழும்பில் பாடசாலை ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்த காலத்தில் ,சட்டக் கல்வியின்பால் அதிகம் ஈர்க்கப்பட்ட மறைந்த அமீர் இஸ்மாயில், வழக்கறிஞரான பின்னர் சட்டமா அதிபர் திணைக்களம் முதல் நாட்டின் சட்டக் கட்டமைப்பின் வெவ்வேறு மட்டங்களிலும் அதாவது,மேல் நீதிமன்ற நீதிபதியாக, மேன்முறையீட்டு மன்ற நீதியரசராக ,அதன் தலைவராக பின்னர் உயர்நீதிமன்ற நீதியரசராக பல்வேறு பதவிகளிலும் தடங்களைப் பதித்துள்ளது மட்டுமல்லாது, லஞ்ச ஊழல் , மோசடி ஆணைக்குழுவின் தலைவராகப் பணியாற்றியுள்ளதோடு ,சட்ட கல்வி பேரவை ,நீதிச் சேவை ஆணைக்குழு ஆகியவற்றிலும் பங்களிப்பு செய்திருக்கின்றார்.

ஓய்வு பெற்ற பின்னரும் கூட அவரிடமிருந்த அறிவுத் தேடல் அவரை விட்டு அகன்று விடவில்லை.

அதற்கும் அப்பால் சென்று, அமைதியாக வாழ்ந்து கொண்டே ஆன்மீகத்திலும் அவர் ஊறித் திளைத்திருந்தார். மக்கள் மத்தியில் பெரிதும் மதிக்கப்பட்ட அவர் சட்ட வட்டாரங்களில் உன்னத நிலையில் வைத்துப் போற்றப்பட்டவர்களில் ஒருவராக அண்மைய தசாப்த காலங்களின் இலங்கை வரலாற்றில் இடம் பெறுகின்றார் .

எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாரின் நற்செயல்கள் அனைத்தையும் பொருந்திக் கொள்வானாக.அவருக்கு மேலான ஜன்னத்துல் பிர்தௌஸ் /ல் அஃலா என்ற உயரிய சுவன வாழ்வை வழங்குவானாக எனப் பிரார்த்திப்பதோடு, அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் மனைவி, மக்களுக்கும், உறவினர்களுக்கும் சம்மாந்துறை வாழ் மக்களுக்கும் தனிப்பட்ட முறையிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## உம்ரா யாத்திரை மற்றும் சவூதிக்கான வருகைகள் தொடர்பான விடயங்களை கையாள்வதற்காக புதிய போரம்







(காலித் ரிஸ்வான்)

உம்ரா யாத்திரை மற்றும் சவூதிக்கான வருகைகள் தொடர்பான விடயங்களை கையாள்வதற்காக புதிய போரம் ஒன்று உருவாக்கப்பட உள்ளது. இது தொடர்பான மாநாடு எதிர்வரும் 22ஆம் திகதி நடாத்த, சவூதி அரேபிய ஹஜ் உம்ரா அமைச்சகம் தீர்மானித்துள்ளது.

மதீனா பிராந்திய ஆளுநரான இளவரசர் சல்மான் பின் சுல்தான் பின் அப்துல்அஸீஸ் தலைமையில், மன்னர் சல்மான் சர்வதேச மாநாட்டு மையத்தில் இம் மன்றம் நடைபெறவுள்ளது.

சவூதி அரேபியாவிற்கு உம்ராவுக்காகவும் பயணிகளாகவும் வருகின்ற சர்வதேச மற்றும் உள்நாட்டு மக்களின் அனுபவத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட முன்முயற்சிகள் மற்றும் சேவைகளை இம் மன்றம் எடுத்துக் காண்பிக்கவுள்ளது. இது சவூதி அரேபியாவின் 2030 ஆம் ஆண்டுக்கான இலக்குகளை அடைவதன் ஒரு பகுதியாக இருப்பதோடு அதிக எண்ணிக்கையிலான உம்ரா யாத்திரிகர்கள் மற்றும் பார்வையாளர்கள் மக்கா மற்றும் மதீனா நகரங்களிற்கு ஈர்த்து அவர்களுக்கு சிறந்த பயண அனுபவத்தை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

பயண முகாமையாளர்கள், புனித ஹஜ் உம்ரா யாத்திரை மற்றும் சுற்றுலா நிறுவனங்கள் மற்றும் காப்பீடு, சுகாதாரம், போக்குவரத்து மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை உள்ளடங்களான அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையினர் போன்ற பலர் இம்மன்றத்தில் பங்கேற்கவுள்ளனர். உம்ரா யாத்திரிகர்கள் மற்றும் ஏனைய பார்வையாளர்களின் அனுபவத்தை மேம்படுத்துவதற்காக உம்ரா மற்றும் சுற்றுலாத் துறையில் உள்ள சிறப்பான விடயங்களை இம் மன்றம் எடுத்துக் காட்டுவதோடு, இது பயணிகளது தேவைகளை பூர்த்தி செய்யும் திட்டங்கள், சேவைகளின் தரத்தை உருதிப்படுத்தல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவதாக அமையும். இத்திட்டமானது சவூதி அரேபியாவை நோக்கி வரும் உம்ரா மற்றும் சுற்றுலாப் பயணிகளின் சவூதியிலான அனுபவத்தை சிறந்த விதத்தில் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்ற அந்நாட்டுத் தலைமைகளின் ஆர்வத்திற்கான எடுத்துக்காட்டாக அமைகிறது.

இந்த உம்ரா மற்றும் சுற்றுலா மன்றத்தின் பொது அமர்வுகள் மற்றும் அதனுடன் இணைந்த பட்டறைகளில், பங்கேற்பாளர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்துகொள்ளவிருக்கும் அதே நேரம் கண்காட்சியில் பங்கேற்கும் பல்வேறு துறையினர் மற்றும் நிறுவனங்கள் தங்கள் புதுமையான அனுபவங்கள், சேவைகள் மற்றும் தயாரிப்புகளை பகிர்ந்து கொள்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இம் மன்றத்தின் போது, ஹஜ் மற்றும் உம்ரா அமைச்சகம் புதிய வாய்ப்புகள் மற்றும் புதுமையான பணி களங்களை அறிவிக்கவுள்ளது. இது சம்பந்தமான சேவைகளை மேம்படுத்தவும், மக்கா, மதீனா மற்றும் பல்வேறு இஸ்லாமிய, வரலாற்று, மற்றும் தொல்பொருள் தளங்களுக்கு பார்வையாளர்களின் பயணத்தை எளிதாக்கவும் பல கூட்டு ஒப்பந்தங்கள் இதன் போது கைச்சாத்தாகவுள்ளன.

# இலங்கையில் காணி மற்றும் வீட்டு உரிமை தொடர்பான மேலாய்வு சபை மீண்டும் இயங்கும் சாத்தியம்

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கீழ் காணப்பட்ட காணி மற்றும் வீட்டு உரிமை தொடர்பான மீளாய்வு சபை கடந்த காலங்களில் முற்றாக செயலிழந்து காணப்பட்டது. இதன் விளைவாக நாடளாவிய ரீதியில் பாதிக்கப்பட்டவர்கள் பல்வேறு அசோகரிங்களுக்கு முகம் கொடுத்தனர்.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்,

நகர அபிவிருத்தி விட அமைப்பு அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனை குழுவிற்கு உத்தியோபூர்வமாக அறிவித்து உரிய



நடவடிக்கை மேற்கொண்டதன் பயனாக சபைக்கு புதிய உறுப்பினர்களை நியமித்து அதனை மீண்டும் இயங்க வைப்பதற்கு நகர அபிவிருத்தி வீடமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேசிய விடமைப்பு அதிகார சபையின் கீழ் உள்ள காணி மற்றும் வீடுகளில் வசிப்போரும், உரிமை கோருவோர் தொடர்பான பிணக்குகள் ஏற்படும் பச்சத்தில் அவற்றிற்கு திருப்திகரமான தீர்வு எட்டப்படாத நிலையில் இந்த சபைக்கு மேல்முறையீடு செய்வதன் மூலம் கால தாமதம் இன்றி உரிய தீர்வினை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும். - என்றார்.

# பழைய மாணவர்களினால் புனர் நிர்மாணம் செய்யப்பட்ட அதிபர் காரியாலயம் கையளிப்பு



(சர்ஜூன் லாபீர்)

கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையில் 1991 தொடக்கம் 1996 வரை ஒரே வகுப்பில் கல்வி கற்ற பழைய மாணவர்களின் அனுசரனையில் புணர்நிர்மாணம் செய்யப்பட்ட உதவி அதிபருக்கான அலுவலக அறையினை கையளிக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு மாணவ சமூகத்தின் தலைவர் பொறியியளாளர் றிஸ்க்கான் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் கல்முனை சாஹிராக் கல்லூரிக்கு உதவி அதிபருக்கான காரியாலயம் ஒன்றை புணர்நிர்மாணம் செய்து தருமாறு பாடசாலை சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய எமது 91பு-96பு மாணவ சமூகமானது அக்காரியாலயத்தின் தேவைகளை கண்டறிந்து தொழில் நிமிர்த்தம் வெளிநாடுகளில் வாழும் வகுப்புத் தோழர்களின் உயர் பங்களிப்பில் சமார் 3 1ஃ2 இலட்சம் ரூபா செலவில் புணர்நிர்மாணம் செய்யப்பட்டு பாவனைக்கு விடப்பட்டது.

இதே வேளை கற்றுத்தந்த ஆசிரியர்களை கௌரவிக்கும் விழாவும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# சீனன் கோட்டை பள்ளிச் சங்க உப செயலாளருக்கு கௌரவம்

(பீ.எம். முக்தார்)

பேருவளை சீனன்கோட்டை பாஸியா பெரிய பள்ளிவாசலில் ஆத்மீக ஞானி சங்கைக்குரிய உதுமான் லெப்பை ஆலிம் (ரஹ்மத்துல்லாஹி) ஞாபகார்த்தமாக வருடாந்தம் நடைபெற்றது.

கத்தமுல் குர்ஆன் தமாம் கந்தூரி மஜ்லிஸில் சீனன்கோட்டை பகுதிக்கான கலீபதுஷ்ஷாதுலியாக தரீக்காவின் உலக ஆன்மீக தலைவர் செய்/ஹ ஸஜ்ஜாஜா அஷ் ஷெய்க் மஹ்தி அப்துல்லாஹ்வினால் நியமிக்கப்பட்ட சீனன் கோட்டை பள்ளிச் சங்க உப செயலாளரும் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் நிறைவேற்று குழு உறுப்பினருமான அஷ்ஷெய்க் ஏ.எச்.எம் இஹ்ஸானுத்தீன் அபுல் ஹஸன் (நளீமி) பொன்னாடை



போர்த்தி கொளரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் பொருளாளர் கலாநிதி மொளலவி அஸ்வர் அஸ ாஹீதீன் (அல் அஸ்ஹரி), சீனன் கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயளாலர்கள், உப தலைவர், உறுப்பினர் கலீபத்துஷ் ஷ ாதுலிகளான மௌலவிகள் உட்பட உலமாக்கள் பள்ளிச் சங்க உறுப்பினர்கள் ஊர் பிரமுகர்கள் என பெருமளவிலானோர் கலந்து கொண்டனர்.

# தேசிய சிறுவர் அதிகார சபை நடத்தும் தேசிய சித்திரம், சுவரொட்டி மற்றும் கார்ட்டூன் போட்டிகள்- 2024

(ஐ.ஏ.காதிர் கான்)

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் தேசிய ரீதியிலான சித்திரம் சுவரொட்டி மற்றும் கார்ட்டூன் போட்டிகள் நடத்தப்பட உள்ளன இதில் பின்வரும் பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட உள்ளது.

- தரம் 1 முதல் 13 வரையிலான மாணவர்கள்.
- ஆசிரியர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர் கல்வி நிறுவன மாணவர்கள்.
- தொழில் புரிவோர் அல்லது வேறு நபர்கள்.

இப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பணப்பரிசல்களும், பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்படும்.

விண்ணப்ப முடிவு தேதி மே மாதம் 31 ஆம் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளதனால் ஆக்கங்களை தபால் மூலமாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

National Child Protection Authority
No.330, Thalawathugoda Road,
Madiwela.



பாணந்துறை ஜீலான் மத்திய நவோதய தேசிய பாடசாலையின் பழைய மாணவிகள் சங்கத்தினால் நடத்தப்பட்ட குர்ஆன் தப்ஸீர் பாடநெறி வகுப்பில் சித்தியடைந்த மாணவிகளுக்கான சான்றிதழ் கல்லூரி அதிபர் ஏ. எம் ஹலீம் மஜீத் இனால் வழங்கி வைக்கப்பட்டதை படத்தில் காணலாம்.

(படம்:பரீட் இக்பால்)

# பிறைக்குழுவை முன்னிறுத்தி சமூக ஒற்றுமையை சீரழிக்க சில சக்திகள் முயற்சி

## மார்க்க, அரசியல், சிவில் தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்

புனித நோன்புப்பெருநாளை கொண்டாடும் விதமாக ஸஹபான் மாத தலைபிறை பார்க்கும் நிகழ்வில் தீர்மானம் எடுப்பதில் இருந்த காலதாமதத்தை வைத்து முஸ்லிம் சமூகத்தினரை மீண்டும் பிளவுபடுத்தும் ஒப்பந்தச் சித்தாந்தங்களை விதைக்கும் ஒப்பந்தச் சிந்தனையாளர்களின் முயற்சிகளை மார்க்க, அரசியல் மற்றும் சிவில் தலைவர்கள் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும் என கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில், ஒரு நூ ற்றாண்டுக்கும் மேலாக கொழும்பு பெரிய பள்ளிவாசலை முன்னிறுத்தி பிறை பார்க்கும் பணியை எமது முன்னோர்கள் கடைப்பிடித்து வருகின்றனர். அதில் இஸ்லாமிய மாத சுட்டெண்ணையும் மாதாந்தம் அவர்கள் கணித்து வருகிறார்கள். கொழும்பு பெரிய பள்ளிவாசலின் பிறை குழுவில் தற்போது அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை மற்றும் அரசாங்கத்தின் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அதன் வெளிப்படைத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

உறுதியான மற்றும் நம்பகமான



தீர்மானங்களை எடுப்பதில் உள்ள சில காலதாமதங்களை முன்வைத்து சில ஒப்பந்தச் சிந்தனையாளர்கள் முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையை சிதைத்து பிராந்திய மற்றும் பூகோள அரசியல் சதிகளை செய்ய முயற்சிக்கிறார்களா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. சில நாட்களாக சமூக ஊடகங்களில் கிழக்கு மாகாணத்தில் தனியாக பிறை பார்க்கும் குழு அமைக்கப்பட வேண்டும் என்று சிலர் பகிரங்கமாகவே கருத்துத் தெரிவித்து வருவதை பார்க்கும் போது சந்தேகம் வலுப்பெறுகிறது.

கொழும்பு பெரிய பள்ளிவாசலில் கூடியிருந்த தேசிய பிறைக்குழு தனது அறிவிப்பை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் முன் சிலர் தமது சொந்த சமூக வலைத்தளங்களிலும் மற்றும் முக்கியஸ்தர்கள் பலர் ஊடகங்களிலும் விமர்சித்திருந்தனர். சில சமூகவலைத்தள செயற்பாட்டாளர்கள் முந்திக்கொண்டு பிறை தொடர்பில் பிழையான தீர்மானத்தை சமூக ஊடகங்கள் ஊடாக பரப்பி முஸ்லிம் சமூகத்தினரிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி, கொழும்பில் உள்ள பெரிய பள்ளிவாசல் மீதான பிறைக்குழுவை குற்றம் சாட்டி, முஸ்லிம் சமூகம் மத்தியில் கொழும்பு பெரிய பள்ளிவாசலுக்கும் பிறைக்குழுவுக்கும் எதிரான கருத்தியலை உருவாக்கி வந்தனர். இதனூடாக முஸ்லிம் சமூகத்தினரிடம் பிளவுபடுத்தும் கருத்தியல் மனப்பான்மையை உருவாக்கி முஸ்லிம் சமூகத்திடம் பாகுபாட்டை உருவாக்குவதே அவர்களின் அடிப்படை நோக்கமாகும்.

கிழக்கிலும், தெற்கிலும், வடக்கிலும், மேற்கிலும் உள்ள முஸ்லிம்கள் அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஒரு சக்தியாக ஒன்றிணைய வேண்டிய இந்த நேரத்தில் அரசியல் கட்சிகள் மற்றும் மதக் கருத்தியல் பிரிவுகள் மூலம் முஸ்லிம் சமூகத்தை பிளவுபடுத்தி, இந்த ஒப்பந்த பிரிவினைவாத சித்தாந்தங்கள் மற்றும் முஸ்லிங்கள் ஒருபோதும் சோரம்போக கூடாது. மட்டுமின்றி இந்த விடயங்களில் மார்க்க, அரசியல் மற்றும் சிவில் தலைவர்கள் ஒன்றிணைந்து ஒரே சமூக கட்டமைப்பாக செயல்பட வேண்டும் என்றார்.

# மீண்டும் தேசியத்தில் சான்றிதழ் மற்றும் பணப்பரிசு வென்ற ஓட்டமாவடி யஸீர் அறபாத்



எதிர்கால இலங்கை என்பதை இலக்காகக் கொண்டு "நாளை வெல்லும் இலங்கை" எனும் கருப்பொருளில் டென்னிசன் ரூ வினிதா ரோட்றிகோ அறக்கட்டளை (Tennyson & Vinitha Rodrigo Trust) யினால் தேசிய ரீதியாக மும்மொழிகளிலும் நடாத்தப்பட்ட போட்டியின் வெற்றியாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப லோடஸ் அரங்கில் நடைபெற்றது.

குறித்த நிகழ்வில், தமிழ்மொழி மூல ஒளிப்பதிவு, கட்டுரைப்போட்டியில் "சமூகத்தின் மத்தியில் நேர்மை, கண்ணியம் மற்றும் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தல்" எனும் தலைப்பில் கட்டுரைப்போட்டியில் ஓட்டமாவடியைச் சேர்ந்த இளங்கலைமாணி பட்டதாரி எம்.என்.முஹம்மது யஸீர் அறபாத் முன்றாமிடத்தைப்பிடித்து, சான்றிதழ் மற்றும் 75,000 ரூபா பணப்பரிசையும் பெற்றுக்கொண்டார்.

தமிழ் மொழிப் போட்டியில் பங்குபற்றிய போட்டியாளர்களின் ஆக்கங்களைப் பரிசீலிக்க ஆரம்ப கட்ட நடுவர்களாக யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி டி.அஜந்த குமார், யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைபீட விரிவுரையாளர் திரு.சாமிநாதன் விமல், இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தமிழ் செய்திப்பிரிவின் பணிப்பாளர் வை.எல். யாகூப், வீரகேசரி பத்திரிகையின் உதவிச்செய்தி ஆசிரியர் திரு.லியோ நிரோசா தர்சன் போன்றவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

# இஸ்ரேல் - ஈரான் போர் சர்வதேச பதற்றம்

## தீர்வை நோக்கி உலக நாடுகள்



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

ஈரானிய இராணுவத் தளபதிகள் டமாஸ் கஸில் உள்ள ஈரானின் தூதரக வளாகத்திற்குள் ஒரு உயர்மட்டக் கூட்டத்தைக் கூட்டுவது பாதுகாப்பானது என்று நினைத்து அங்கே கூட்டம் நடத்திக் கொண்டு இருந்தனர். , சர்வதேச விதிமுறைகளின் படி தூதரகங்களை தாக்க கூடாது. இதனால் அங்கே ஈரான் ராணுவ அதிகாரிகளின் கூட்டம் நடந்தது.

ஆனால், சர்வதேச யு என் விதிகளை மீறி தூ தரக வளாகத்தின் மீது வான்வழித் தாக்குதலில் இஸ்ரேல் ஈடுபட்டது. இதில் ஏழு ஈரானிய அதிகாரிகள் கொல்லப்பட்டனர். ஈரானின் உயர்மட்ட ராணுவ அதிகாரிகளின் ஒருவரான பிரிகேடியர் ஜெனரல் முகமது ரெசா ஜாஹேதி கொல்லப்பட்டார். இவர் புரட்சிகர காவல்படையின் (IRGC) மூத்த தளபதி ஆவார்.

காசாவில் தொடர்ந்து படுகொலைகளை நடத்தி வரும் இஸ்ரேலிய ராணுவம் இன்னும் திருந்தாத இஸ்ரேலிய தேசமும் அதன் பிரதமரும் மீண்டும் , மீண்டும் தாக்குதலை தொடர்ந்து வருவது தான் இத்தனை பிரச்சினைகள் தொடர்வதற்கு மூல காரணமாக அமைந்து விட்டது. இதன் தொடர்ச்சியாக ஈரான் 300 க்கு மேற்பட்ட ட்ரோன்கள் மற்றும் பாலிஷ்டிக் ஏவுகணைகள் மூலம் இஸ்ரேல் நாட்டின் மீதான தாக்குதலை நடத்தியது. இந்த தாக்குதல் காரணமாக பெரும் தேசத்தை இஸ்ரேலிய ராணுவம் சந்தித்துள்ளது என்று ஈரான் கூறிய நிலையில் இஸ்ரேல் அரச தலைமை 99 தசமான தாக்குதலை தாங்கள் முழுமையாக தடுத்து நிறுத்தி விட்டதாக மார்தட்டிக் கொள்வதை நாம் காண கூடியதாக உள்ளது. இருந்த போதிலும் ஈரான் ராணுவத்தால் இஸ்ரேல் நாட்டின் மீதான தாக்குதல் பல்வேறு சேதங்களை ஏற்படுத்தி உள்ளது என்பதே உண்மையாகும். ஆனாலும், இஸ்ரேலிய அரச தலைமை 90 மூ விதமான தாக்குதலை முறியடித்து விட்டதாக கூறி வருகின்றது. ஆனால், வடக்கு இஸ்ரேலிய பகுதியில் வலிமை வாய்ந்த ஹெஸ்புல்லாஹ் போராளிகள் ஏவிய ஷாஹின் 136 ஆளற்ற சிறிய இரக விமானங்கள் இஸ்ரேல் நாட்டின் உட்பகுதியில் கட்டத்தை முழுமையாக தகர்த்து உள்ளே இருந்த 15 பேரை பெரும் காயத்தை ஏற்படுத்தி இருப்பதாகவே செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் இஸ்ரேலிய ராணுவம் அதனைத் குறித்து எந்தவொரு தகவலையும் அறிவிப்பு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஈரான் ராணுவம் மிகுந்த தொழில்நுட்பம் கொண்ட இந்த ஆளற்ற விமானங்களை இஸ்ரேலிய அயர்ன் டோம் வான் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை கருவியால் தடுக்க முடியவில்லை என்பதே உண்மையாகும். இந்த புதிய தொழில் நூட்பம் மூலம் ஈரான் ஏற்படுத்திய தாக்கம் சேதாரம் உண்மையில் இஸ்ரேலிய அரச தலைமையை திக்கு முக்காடும் வகையில் இருப்பதாக நம்பப்படுகிறது. இது ஒரு சிறிய நிகழ்வு மட்டுமே என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது ஏற்பட்டுள்ள தாக்குதல் மூலம் சரியான ஒரு தருணத்தை உணர்ந்து இருக்க கூடும் என்று நாங்கள் நம்ப கூடிய அளவில் தற்போது அந்த பிரதேசத்தில் நிலைமை முற்றிலுமாக மாறி உள்ளதை உலகம் முழுமையாக கவனிக்க தவறவில்லை என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

இந்த தாக்குதல் தொடர்பாக அதாவது இஸ்ரேலுக்கு (Israel) எதிரான தாக்குதலின் மூலம் அந்நாட்டின் மேலதிகாரத்தை நாம் சிதைத்துவிட்டதாக ஈரானிய (Iran) ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி (Ebrahim Raisi) தெரிவித்துள்ளார்.

ஈரான் இராணுவத்தின் வருடாந்த அணிவகுப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் இன்று வெள்ளிக்கிழமை காலை ஈரான் ராணுவ நிலைகள் மீதான தீடிரென தாக்குதலை இஸ்ரேலிய ராணுவம் ஆரம்பித்ததாக அமெரிக்கா செய்தி ஏஜென்சி தெரிவித்துள்ளது. உண்மையில் இதன் தொடர்ச்சியாக ஈரான், சிரியா மற்றும் ஈராக் பகுதிகளில் தான் இந்த தாக்குதல் நடந்ததாக கூறப்படுகிறது . இந்த நிலையில் ஈரான் சர்வதேச முகாமையாளர்கள் அந்த பகுதிக்கு சென்று பார்வையிட தடை விதித்துள்ளது குறிப்பிடத்தக்கது. அதாவது இஸ்பஹான் பகுதியில் தான் இந்த தாக்குதல் நடைபெற்றது என்று செய்திகள் வெளியாகியுள்ளன.இஸ்பஹான் பகுதியில் தான் ஈரானின் பாதுகாக்கப்பட்ட அணு உலைகள் இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால் உண்மையில் ஈரானின் பாதுகாக்கப்பட்ட அணு உலைகள் எங்கு உள்ளது என்பதை இது வரை யாரும் அறிந்து கொள்ள முடியவில்லையே என்பதே உண்மையாகும். குறிப்பாக அமெரிக்கவே இது வரை ஈரானின் அணு உலைகள் எங்கு உள்ளது என்பதை குறித்து அறிய முடியவில்லை என்பதே யதார்த்தமான உண்மையாகும் . ஆனால் உண்மையில் இஸ்பஹான் அணு உலைகள் மீதான தாக்குதல் எந்தவொரு பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை என்று சர்வதேச என்று சர்வதேச அணுசக்தி கண்காணிப்பு ஆணையம் உறுதி செய்து உள்ளது . ஆனால் இஸ்பஹான் பகுதியில் தான் ஈரான் ராணுவ தளவாடங்கள், ஏர் பேஸ் பகுதிகள், அதிக பட்சமாக ஏவுகணைகள் தயாரிப்பு நிறுவனங்கள் மற்றும் நியூக்ளியர் சாதனங்கள் உற்பத்தி இருப்பதால் இந்த பகுதியில் இஸ்ரேலிய ராணுவம் தாக்குதலை நடத்தியது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் அமெரிக்கா வெளிவிவகார துறை அமைச்சர் இந்த தாக்குதலுக்கும் அமெரிக்கா நாட்டிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று தெளிவாக மறுத்து விட்டது. அதே நேரத்தில் இனி இஸ்ரேலிய ராணுவம் தொடுக்கும் தாக்குதல் நடவடிக்கைகளை அமெரிக்கா ஒரு போதும் ஆதரிக்க போவதில்லை என்று தெளிவாக கூறியுள்ளது. அதே நேரத்தில் மேற்கு நாடுகள் இஸ்ரேல் இது போன்ற ஆபத்தான போட்டி தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று கூறிய நிலையில் பெஞ்சமின் நிதான்யாகு அதனை கேட்பதாக இல்லை என்பதே தற்போதைய நிலையாக இருக்கிறது..

அதேநேரத்தில் இந்த தாக்குதலுக்கு முழுமையாக பதிலடி தரப்படும் என ஈரான் அறிவிப்பு செய்து உள்ள நிலையில் இது போன்ற பிரச்சினை உண்மையில் அமெரிக்கா அரசாங்கத்திற்கு மிகுந்த சிக்கலை ஏற்படுத்தும் வகையில் இருப்பதாக நம்மால் பார்க்க முடிகிறது. ஏனெனில் அணு ஆயுத தொழில்நுட்பத்தை கொண்ட இரண்டு தேசங்கள் மோதும் நிலையில் இதன் பாரிய தாக்கத்தை யாராலும் கட்டுபடுத்த இயலாது என்று அமெரிக்கா அச்சப்படும் நிலையில் அது தொடர்ந்து இஸ்ரேலிய ராணுவ நடவடிக்கைகளை மட்டுப்படுத்த முயன்ற நிலையில் இது வரை வெற்றி பெறவில்லை என்பதே உண்மையாகும்.

தற்போதைய நிலையில் ஈரானின் நலன்கள் மீது இஸ்ரேல் சிறிய தாக்குதலை நடத்தினால் கூட ஈரானின் பதிலடி கடுமையானதாக இருக்கும் என்று ஈரான் அரசு தலைமை தெளிவாக கூறியுள்ளது . நிச்சயமாக சர்வதேச அளவில் இது பிராந்திய போராக வலுப்பெறும் சூழ்நிலை உருவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இன்றும் பதட்டம் மட்டும் முறுகல் நிலை அதிகரித்துள்ளது ஒட்டுமொத்த உலக சமூகத்திற்கும் எந்தவொரு நிலையிலும் நல்ல ஒரு செயதியாக இல்லை என்பதே உண்மையாகும்.

இஸ்ரேலிய ராணுவம் ஈரானின் தாக்குதலை கண்டு ஓரளவுக்கு நடுங்கிய நிலையில் தான் தொடர் சோகம் மேலும் வரும் காலத்தில் அதிகரிக்கும் வகையில் தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக அமைந்து விடுமோ என்று நாம் அஞ்சக் கூடியதாக உள்ளது. அதாவது இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அதன் அரசியல் தலைவர்கள் காசாவை முழுமையாக அழித்து அல்லது அங்கிருந்து மக்களை நிரந்தரமாக அங்கிருந்து வெளியேற்றி விட்டு மீண்டும் அந்த பகுதியில் யூத குடியேற்றத்தை அங்கு நிரந்தரமாக்க முயலுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இஸ்ரேலிய அரசும் அதிதீவிர வலதுசாரி யூதர்களின் நடவடிக்கைகள் இப்படி தொடரும் சூழலில் இதன் முடிவுதான் என்ன என்கிற கேள்விக்கு தற்போது யாரிடமும் துல்லியமான பதில் இல்லை என்பதே மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இந்த நிலையில் இஸ்ரேல் மீதான ஈரானின் எதிர்பாராத தாக்குதலையடுத்து, ஈரானின் ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகனைகள் தயாரிப்பாளர்கள் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க ஐரோப்பிய ஒன்றியம் (European Union) தீர்மானித்துள்ளது.இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியதையடுத்து, கூட்டப்பட்ட ஒன்றியத்தின் முதலாவது அமர்விலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.அத்துடன், ஈரானை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது மிகவும் முக்கியம் என ஐரோப்பிய ஒன்றியத்தின் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் ஈரான் வெளிவிவகார பெஞ்சமின் நெதன்யாகுவும் அவரது அரசாங்கமும் மீண்டும் ஒருமுறை இஸ்ரேலுக்கு ஆதரவாக நின்ற நாடுகளின் விருப்பங்களைப் புறக்கணிப்பதில் குறியாக உள்ளனர். இஸ்ரேலின் தீவிர தேசியவாதக் கூட்டாளிகள், இரான் மீது கொடூரத் தாக்குதல் நடத்தக் கோரினர். அவர்களில் ஒரு தரப்பினர் இஸ்ரேல் “வெறியுடன் செயல்பட வேண்டும்“ என்றனர்.காஸாவில் தொடரும் மனிதாபிமானப் அமைச்சகம் சார்பில் வெளியான செய்தினுடாக இஸ்ரேல் நாடு மிகுந்த அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகிறது. குறிப்பாக பெஞ்சமின் நிதான்யாகு தன்னை தேசத்தின் காவலராக அல்லது யூத இனத்தின் தேசிய காவலராக தன்னை நிலைநிறுத்திக் கொள்ள அவர் இது போன்ற போர்களை நடத்தினார் ஆக வேண்டிய கட்டாயம் அவருக்கு உள்ளது என்பதே அவரது மீது அனைவராலும் வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் ஆகும்.

தற்போதைய நிலையில் இஸ்ரேலிய ராணுவம் ஈரான் மீது நடத்திய தாக்குதல் பற்றிய செய்திகள் வெறும் ஒலை வெடி வகையிலான தாக்குதல் என்று மட்டுமே தெரிய வருகிறது. ஈரான் இன்று காலை தெரிவித்த அடிப்படையில் இனியொரு தாக்குதல் தேவையில்லை என்பது தான் அதன் முடிவாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

இரண்டாவது, உலகின் மிகப்பெரிய பெரிய ஆயுதங்களை தம்மிடம் இருப்பதாக இது வரை நம்பப்படுகிற இஸ்ரேலிய ராணுவம் ஹமாஸ் இடம் இன்று வரை போராட்டம் நடத்திய வரும் நிலையில் அதன் பலவீனம் காரணமாகவே அவர்கள் முழுமையாக வெற்றி பெற இயலாது சூழ்நிலை காணப்படுகிறது.

இஸ்ரேலிய அரசும் அதன் சக ஆதரவு நாடுகளும் குறிப்பாக அமெரிக்க,, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மன் போன்ற நேச நாடுகள் மூலம் ஓரளவுக்கு ஒத்துழைப்பை பெறலாம் . ஆனால் மேற்கண்ட தேசங்கள் தற்போதைய நிலையில் இஸ்ரேல் தொடர்ந்து போரில் ஈடுபட வேண்டாம் என்று அவர்கள் வலியுறுத்தி வருவது தான் யதார்த்தமான உண்மையாகும். அதேநேரத்தில் ஈரான் மற்றும் அதன் நேச நாடுகளாக இருக்கும் ரஷ்யா மற்றும் சீனா, வட கொரியா தேசங்கள் மூலம் மிகவும் மோசமான ஆயுதங்களை பெற சாத்தியக்கூறு உள்ளது. அப்படி ஒரு நிலை உருவாகும் போது இஸ்ரேலிய ராணுவம் மிகவும் கடுமையான பாதிப்பை சந்திக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் யாருக்கும் இருக்க வாய்ப்பே இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

தற்போதைய நிலையில் மிகுந்த வல்லமை கொண்ட அணு ஆயுத தேசமான ஈரான் செறிவூட்டப்பட்ட யுரேனியம் தயாரிப்பு அடுத்த கட்ட அனுகுண்டாக உருமாற்றம் அடைந்து



வேறு வழியின்றி தன்னை நிலைநிறுத்திக் கொள்ள இந்த தாக்குதலை அது நடத்தி உள்ளது கடந்த வெள்ளிக்கிழமை காலை உள்ளூர் நேரம் 5 மணியளவில் இஸ்ரேலிய ராணுவம் தனது தாக்குதலை ஈரான் மீது நடத்தி தனது ஆத்திரத்தை தீர்த்து கொள்ள முனைகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

1979-ஆம் ஆண்டு இஸ்லாமியப் புரட்சி நடக்கும் வரை இரு நாடுகளும் நட்பு நாடுகளாக இருந்தன. புரட்சிக்குப் பிறகு இரானில் அமைந்த அரசு, இஸ்ரேலை எதிர்ப்பதை தனது சித்தாந்தத்தின் முக்கிய பகுதியாக அமைத்துக்கொண்டது.

இரானின் இந்தப் புதிய இஸ்லாமிய ஆட்சி இஸ்ரேலின் இருப்புக்கான உரிமையை அங்கீகரிக்கவில்லை, மேலும் அதை ஒழிக்க வேண்டும் என்று கூறி வருகிறது.

இரானின் உச்ச தலைவரான ஆயத்துல்லா அலி காமனெயி, முன்னர் இஸ்ரேலை ஒரு “புற்றுநோய் கட்டி“ என்று அழைத்தார். மேலும் அக்கட்டி ”நிச்சயமாக அகற்றப்படும்,” என்றார்.

தெஹ்ரானின் சொல்லாட்சிகள், இஸ்ரேலை அழிக்க உறுதிமொழி அளித்த நிழல் படைகளை உருவாக்கியது, ஹமாஸ் மற்றும் ஹெஸ்பொலா போன்ற ஆயுதக் குழுக்களுக்கு நிதியுதவி மற்றும் ஆயுதம் வழங்குவது, மற்றும் இரான் ரகசியமாக அணு ஆயுதங்களை உருவாகுகிறது என்ற சந்தேகம் - இவற்றால் இரான் தனது இருப்புக்கே அச்சுறுத்தல் விடுப்பதாக இஸ்ரேல் நம்புகிறது.

இதற்கு மிக முக்கியமான மூல காரணியாக பெஞ்சமின் நிதன்யாகு வின் யூத கடும் போக்குவாத அரசியல் கூட்டணி கட்சிகள் இருந்து வருவதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள முடிகிறது.

குறிப்பாக காசாவில் நடைபெற்று வருகின்ற தலைவர் சார்லஸ் மைக்கல் கூறியுள்ளார்.

இஸ்ரேலிய நாடு தற்போதைய நிலையில் பெருத்த அவமானம் அடைந்த நிலையில் இருப்பதாக சர்வதேச நாடுகளின் செய்தி ஏடுகள் கூறுகின்றன.அதற்கு மிக முக்கியமான காரணியாக பெஞ்சமின் நிதான்யாகு மற்றுமல்லாமல் இதற்கு முந்தைய யூத இனத்தின் அரசியல் தலைவர்கள் அனைவரும் தங்களை வெற்றி கொள்ள முடியாத உலகின் மிகப்பெரிய சக்தி என்கிற அடிப்படையில் தான் பல்வேறு பிம்பங்களை ஏற்படுத்தி தங்கள் நேசத்தின் ஒட்டுமொத்த அடையாளமாக உலகிற்கு எடுத்துக் காட்டி வந்த நிலையில் தான் அவர்கள் இது போன்ற தாக்குதலை சந்தித்து வந்துள்ளார்கள். இதே சூழ்நிலையில் தான் ஈரான் ராணுவத்தால் தற்போது தங்கள் தேசம் மிகப்பெரிய அளவிலான தாக்குதலை சந்தித்து வந்த நிலையில் என்ன பாடுபட்டும் பதில் தாக்குதலை நிகழ்த்தி விட வேண்டும் என்று வாய்ப்புகளை எதிர்பார்த்து காத்திருந்த சூழ்நிலையில் தான் இஸ்ரேலிய ராணுவம் இந்த தாக்குதலை ஈரான் மீது பதிலுக்கு ஏவி இருப்பதாக அறிந்து கொள்ள முடிகிறது.

மேலும் இந்த சூழல் ஒரு வேளை மேலும் வலுவானல் அது அணு ஆயுத போராக வலுப்பெறுமோ என்று அச்சம் சர்வதேச நாடுகள் மத்தியில் ஏற்பட்டுள்ளது மிகைப்படுத்த முடியாத செய்தியாக இருந்து வருகிறது. ஏனெனில் ஈரான் அதிகாரம் மற்றும் இராணுவ பலம் வாய்ந்த தேசமாக இருந்து வருகிறது. அதேநேரத்தில் தொழில்நுட்ப கட்டமைப்பு மற்றும் ராணுவ பலத்தில் மிகைத்த தேசமாக இஸ்ரேலிய அரச தலைமை இருந்து வருவதால் இரண்டு தேசங்களுக்கும் இடையேயான உளவியல் சிக்கலை இது போன்ற நிகழ்வுகள் ஏற்படுத்தும் வகையில் இந்த சூழல் அமைந்து விட்டது

குறிப்பாக அவசர அவசரமாக அமெரிக்கா தான் ஒரு போதும் இது போன்ற செயல்களில் ஈடுபட போவதில்லை அதாவது இஸ்ரேலிய அரச தலைமைக்கு ஆதரவு தரப் போவதில்லை என்று பு7 நாட்டின் தலைவர் இடம் உறுதி அளித்துள்ளார்கள். இதன் தொடர்ச்சியாக நாம் பல்வேறு விடயங்களை அறிந்து கொள்ள கூடியதாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

கடந்த காலங்களில் இஸ்ரேலிய ராணுவம் என்றாலே அவர்கள் மீது (இஸ்ரேல்) கைவைத்தால் ஏனைய தேசங்கள் பஸ்பமாகி விடும் என்ற மாயை இதன் மூலம் முற்றிலுமாக தகர்த்து எறியப்பட்டுள்ளது. குறிப்பாக ஈரான் இதுவரை பெற்றுள்ள ராணுவ உற்பத்தி சார்ந்த விடயங்கள் மிகவும் அதிகமாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. இதனைத் தொடர்ந்து ஈரான் அடுத்த கட்டமாக இஸ்ரேலிய ராணுவம் தாக்குதல் நடத்த முயன்றால் மீண்டும் 500 க்கு மேற்பட்ட ட்ரோன்கள் மற்றும் பாலிஸ்டிக் ஏவுகணைகள் மூலம் தாக்குதலை இஸ்ரேல் மீது நடத்த வாய்ப்புகள் அதிகம் உள்ளது. இரண்டாவது இஸ்ரேலிய நாட்டின் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்ள அதன் எதிரிகள் ஆயுத பலம் வாய்ந்தவர்களாக இஸ்ரேலிய நாட்டை சுற்றி இருப்பது வரும் காலத்தில் இஸ்ரேலுக்கு எல்லா வகையிலும் ஆபத்து என்பதை அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய நேச நாடுகள் நன்கு உணர்ந்து உள்ளார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. ஈரான் ராணுவம் அதன் வலிமை வாய்ந்த சக்திகளாக ஹமாஸ், ஹிஸ்புல்லாஹ் மற்றும் ஹொதிகள் தொடர்ந்து இஸ்ரேலிய ராணுவ நிலைகள் மீது தாக்குதல் நடத்த தயாராக இருக்கும் நிலையில் இது இஸ்ரேலிய நாட்டின் மக்களுக்கு மிகுந்த ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் இருப்பதாக நம்பப்படுகிறது.

விட்டால் இஸ்ரேல் தேசம் முழுமையாக அழிந்து விடும் என்பது போன்ற ஆபத்தான நிலையை பலரும் சுட்டி காட்ட தவறவில்லை. அதனால் தான் இஸ்ரேலிய ராணுவம் மற்றும் அரச தலைமை தனது கவுரவத்தை நிலை நிறுத்திக் கொள்ளும் பொருட்டு சிறிய மூன்று ட்ரோன்கள் மூலம் தாக்குதலை ஈரானின் இஸ்பஹான் பகுதியில் நடத்தி இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதற்கு தாங்கள் பழிவாங்கும் நடவடிக்கையில் ஈரான் ஈடுபட போவதில்லை என்று அறிவிப்பு செய்து உள்ளது சர்வதேச நாடுகளுக்கு மிகவும் நல்ல செய்தியாக உள்ளது.

இஸ்ரேலிய அரசும் அதன் தலைவர் ஆக செயல்படும் பெஞ்சமின் நிதான்யாகு அந்த தேசத்தை முற்றிலுமாக நாசப்படுத்தி விட்டதை யூதர்கள் நன்கு உணர்ந்து உள்ளார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. இஸ்ரேலிய அரசின் கெடுபிடிகள் மூலம் உண்மை அதிகம் வெளியே வரமுடியவில்லை என்பது தான் கள யதார்த்தமாக இருந்து வருகிறது. உலகின் மிகப்பெரிய ராணுவம் உற்பத்தி கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தேசமாக ஈரான் மாறியுள்ளது அந்த பிரதேசத்தில் இஸ்ரேலிய நாட்டிற்கு நல்ல செய்தியாக இனி எப்போதும் இருக்க போவதில்லை என்பதை சர்வதேச நாடுகள் நன்கு உணர்ந்து கொண்டு உள்ளதை தான் நாம் அமெரிக்காவின் பசப்பு வார்த்தைகள் மூலம் அறிந்து கொள்ள கூடியதாக இருக்கிறது. இந்த நிலையில் தன் பலமும் மாற்றான் பலமும் அறியாத நிலையில் இஸ்ரேலிய அரசு தொடர்ந்து செயல்பட முனைந்தால் அது மிகப் பெரிய அழிவை சந்திக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை என்பதே இன்றைய நிலையாக இருக்கிறது....!




ஏ.எச்.முஹம்மது ஹாரீஸ்

# மக்களோடு வாழ்ந்த மனித நேயன் பாலித

ஐக்கிய தேசிய கட்சியின் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தெவரப்பெரும கடந்த 16ம் திகதி மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தார். 1960ம் ஆண்டு மே மாதம் 03ம் திகதி பிறந்த இவர் இலங்கை அரசியலில் 2010 தொடக்கம் 2020 வரையான காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் களுத்துறை மாவட்ட உறுப்பினராக செயற்பட்டு வந்தார்.

சமூக பணிகளில் அதிக ஆர்வம் கொண்ட இவர் மக்களின் பிரச்சினைகளை தனது பிரச்சினையாக கொண்டு செயற்பட்டார். 2016ம் ஆண்டு ஜ/லை மாதம் மீகஹதென்ன ஆரம்ப பாடசாலையில் அனுமதி மறுக்கப்பட்ட 9 மாணவர்களையும் அரச பாடசாலையில் சேர்த்துக் கொள்ளுமாறு அதிகாரிகளை கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார். இதன் போது அவர் தூக்கிட்டு தற்கொலைக்கு முயன்றமையும் குறிப்பிடத்தக்கது. பின்னர் ஜனாதிபதியின் விஷேட உத்தரவின் பெயரில் மத்துகம புனித மரியால் கல்லூரியில் 9 மாணவர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள்.

இலங்கையில் கோவிட் 19 தொற்று நோய் பரவிய காலத்தில் களுத்துறை தேர்தல் தொகுதியின் கிராமப்புர மக்களுக்கு உலர் உணவுகள் மற்றும் பிற தேவைகளை வழங்கி மக்கள் மத்தியில் பாலித தெவரப்பெரும புகழ் பெற்றவராக காணப்படுகின்றார்.

தென்னிலங்கையில் மனிதநேயம் கொண்டவரான முன்னாள் பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும மின்சாரம் தாக்கி உயிரிழந்த செய்தி நாட்டிலுள்ள மூவின மக்களையும் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

பிரதியமைச்சராக செயற்பட்ட இவர் அரசியல்வாதி என்ற நிலையை கடந்து தானும் சாதாரண மனிதன் என்பதை நிரூபிக்கும் வகையில் அவரின் வாழ்க்கை நடைமுறைகள் காணப்பட்டிருந்தன. இந்நிலையில், தனது மரணத்திற்கு ஏற்கனவே தயாராக இருந்ததாக பாலித தெவரப்பெரும தெரிவித்துள்ளார்.

மரணிக்க சில வாரங்களுக்கு முன்னர் ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தனது மரணம் நிகழ்ந்தால் அதற்கான பெரிய செலவுகள் எதனையும் செய்யக் கூடாது என தனது பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினரிடம் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தன்னை அடக்கம் செய்ய பயன்படுத்தும் பிரேத பெட்டிக்கு கூட சிறிய தொகையை செலுத்திவிட்டு அந்த பணத்தில் வீட்டிற்கு வரும் சிறுவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் பொருட்களை பெற்றுக் கொடுக்குமாறு கூறியுள்ளேன். மேலும் எனது மரணத்திற்கு மக்கள் கூட்டமாக வருவார்களா என தெரியவில்லை. அதிகாரத்தில் இருந்தால் மாத்திரமே மக்கள் ஒருவரை தேடி வருவார்கள். அதனால் யாருக்காகவும் காத்திருக்க வேண்டாம். நால்வர் இணைந்து என்னை தூக்கி சென்று புதைத்தால் போதும் என சிறிய மகனிடம் கூறிவிட்டேன்.

எனது பெரிய மகன் எனக்கு முன்னரே உயிரிழந்துவிட்டார். நான் அவருக்கும் தொல்லை கொடுத்ததில்லை. சொத்துக்கள், வாகனங்கள் மீது எனக்கு எவ்வித ஆசையும் இல்லை. பதவியில் இருந்த காலத்திலும் கிராமங்கள் முழுவதும் நடந்தே செல்வதனை பழக்கமாக கொண்டுள்ளேன். மக்கள் சொத்துக்களை கொள்ளையடித்து வீடுகள், சொத்துக்களை சேர்த்துக் கொள்ளவில்லை. மக்களின் அன்பை மட்டுமே சம்பாதித்துள்ளேன்.

நான் எனக்கான தேவைகளை தனியாக தேடிக் கொண்ட ஒருவன் . நான் யாருக்கும் சுமையாக இருந்ததில்லை. செல்லும் இடம் எல்லாம் மக்கள் என்னை சூழ்ந்துக் கொள்வார்கள். நான் சுயமாக வாழ்ந்த மனிதன் என்று நான் இல்லாத போது வரலாற்றில் இருப்பேன் என நினைக்கிறேன்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதி அமைச்சர் பாலித தேவரப்பெரும அவர்களின் இறுதி பயணம் இலட்ச கணக்கான மக்களின் பங்குபற்றலுடன் நடைபெற்றது. இலங்கையின் சமகால வரலாற்றில் பெருந்தொகை மக்களின் பங்கேற்புடன் அரசியல்வாதி ஒருவருக்கு நடைபெற்ற இறுதி நிகழ்வாக இது கருதப்படுகிறது. இறுதி அஞ்சலி நிகழ்வின் போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உட்பட உயர்மட்ட அரசியல்வாதிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இறுதி நிகழ்வில் கட்சி பேதங்கள் இன்றி பலரும் கலந்து கொண்டனர். மூவின மக்களும் பெருந்தொகையான அஞ்சலி செலுத்தினர். பாலித்த தேவரப்பெரும வாழும் காலத்தில் மக்களுக்காக வாழ்ந்த அரசியல்வாதியாக போற்றப்பட்டார். ஐக்கிய தேசிய கட்சியில் நீண்டகாலமாக அரசியல்வாதியாக இருந்த பாலித்தவுக்கு ஏனைய அரசியல்வாதிகள் போன்று பெருந்தொகை சொத்துக்கள் எதுவும் இல்லை. எனினும் விலைமதிப்பற்ற சொத்தான மக்களை அவர் பெற்றுள்ளார். ஆதனை இறுதி நிகழ்வில் பங்கேற்ற மக்கள் வெள்ளம் நிரூபித்துக் காட்டியுள்ளது.

22 வருடங்களுக்கும் மேலான மக்கள் நட்புறவான அரசியல் பயணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, முன்னாள் பிரதி அமைச்சர் பாலித தெவரப்பெரும, மக்கள் மனதில் உண்மையான அரச சேவையின் பெறுமதியின் பல மறக்க முடியாத நினைவுகளை விட்டுச் சென்றுள்ளமை மறுக்க முடியாத உண்மையாக காணப்படுகின்றது.









அஹ்மத் நுஸ்ரி

# இயற்கை சீற்றத்தில் ஆடிப் போன துபாய்

துபாய் வழக்கமாக சூரியன் உச்சம் கொடுக்கும் ஒரு பாலைவன நாடு. செயற்கை முறைமைகளின் ஊடாக தன் நாட்டுக்கான மழையை பொழிவித்துக்கொள்ளும் அளவுக்கு மழை பஞ்சமாக்கப்பட்டுள்ள ஒரு நாடு.

நண்பகல் திடீரென இருள் மயமாகிறது.

தொடர்மாடி குடியிருப்பின் பால்கனியிலிருந்த தளபாடங்கள் தூக்கி வீசப்படுகின்றன.

உலகத்தின் மிக உயரமான கட்டடமான துபாய் நாட்டிலுள்ள டீரசத முாயடகைய வின் மேல் பலத்த இடி விழுகிறது.. வானிலை முன்னறிவிப்புகள் பலத்த புயலையும் கனத்த மழையையும் எதிர்வு கூறுகின்றன.. பாடசாலைகளும் அலுவலகங்களும் விடுமுறை அறிவித்தல்களை விடுக்கின்றன.. புயலின் சீற்ற அதிகரிப்புடன் மழையும் சேர்ந்து மக்களை பீதியில் உறைய வைக்கிறது.. பிரம்மாண்டமான வணிக வளாகங்களுக்குள் கூரை வெடித்து வெள்ள நீர் புகுகிறது.. துபாய் மெட்ரோ வெள்ளத்தில்



தத்தளிக்கிறது.. அப்பாலைவன பிராந்திய பெருஞ்சாலைகள் மூழ்கி, அதிசொகுசு வாகனங்கள் வெள்ளத்தில் குப்பைகளைப் போல் அடித்து செல்லப்படுகின்றன.. பரபரப்பான விமான நிலையங்களுக்குள் வெள்ள நீர் நிறைந்து சேவைகள் ரத்து செய்யப்படுகின்றன.. உள்நாட்டு வெளிநாட்டு பயணிகள் யாவரும் அனர்த்தத்தினால் முடக்கப்படுகின்றனர்.. மின்சாரம் நீர் தொலைத்தொடர்பு முதலிய அத்தியாவசிய சேவைகள் இடைநிறுத்தப்படுகின்றன.. உணவு விநியோக மார்க்கங்கள் தடைப்பட்டு குழந்தைகள் பெண்கள் என கனிசமானோர் அல்லலுருகின்றனர்..

மழை இன்றி தவிக்கும் காண்டியத் தீபகற்பத்திற்குள் மழைநீர் பெருகி மக்களின் அன்றாடத்தை சிதைத்து உயிர் பலிகளையும் ஏற்படுத்துகிறது.

75 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த செவ்வாய் அன்று ஐக்கிய அரபு இராச்சியம் வரலாறு காணா வெள்ளத்தில் மூழ்கியது.

வருடாந்த மழை வீழ்ச்சி 76mm ஆக உள்ள துபாய் நாட்டில், செவ்வாய்க்கிழமை இரவு வரை 142mm மழை வீழ்ச்சி பதிவாகியிருந்தது.

இதைவிட, வருடாந்த மழை வீழ்ச்சி 100mm ஆக உள்ள ஓமான் நாட்டில், ஞாயிறு முதல் புதன்கிழமை இரவு வரை 230mm மழை வீழ்ச்சி பதிவாகியிருந்தது.

ஒப்பீட்டளவில் சுமார் ஒன்றரை வருடத்திற்கான மொத்த மழையும் ஒற்றை நாளில் கொட்டித்தீர்த்ததில் துபாய், ஓமான் உட்பட பஹ்ரேன், கத்தார், சவுதி அரேபியா போன்ற நாடுகளும் பலத்த பாதிப்பிற்குள்ளாகி இருந்தது.

மட்டுமன்றி, ஓமானில் பலத்த மழை மற்றும் வெள்ளப்பெருக்கினால் சுமார் 20 உயிரிழப்புகள் வரை பதிவாகியது.

அரேபிய தீபகற்பத்தினூடாகக் கடந்து சென்ற ஒரு புயலே இந்த பாரிய மழைக்கு காரணம் எனவும், துபாய் நாட்டில் முகில் விதைப்பு (ஊடழரன ளுநநனைபெ) முறையிலான செயற்கை மழை தான் இவ் அனர்த்தத்துக்கு காரணம் எனவும் சமூக வலைத்தளங்களில் பல தகவல்கள் வெளியாகி இருந்தன..

முகில் விதைப்பு (Cloud Seeding) முறைமையானது நாட்டின் நீர்வள பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக 1990 களில் தொடக்கி வைக்கப்பட்டதாகும். முகில் விதைப்பு முறைமை என்பது சில்வர் அயோடைட்டு போன்ற உப்பு படிமங்களை விமானங்களில் சுமந்து சென்று, அரேபியாவை கடந்து செல்லும் சாதாரண முகில்களின் மேல் தூவி அம் முகில்களின் மூலம் வளிமண்டல நீராவியை ஒடுக்கி, நீராக மாற்றி மழை பொழிய வைக்கும் ஒரு விஞ்ஞான தொழினுட்பமாகும். இது பல ஆண்டு காலமாக அமெரிக்கா, சீனா, ஆஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம், ஜெர்மனி, இந்தியா, மலேசியா, ரஷ்யா, மெக்சிகோ போன்ற 50 க்கும் மேற்பட்ட உலக நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இதன் மூலம் தேவைப்பட்ட நேரங்களில் மழையை பொழிவித்துக் கொள்வதும், பெரும் வெளி விழாக்களின் போது தடங்கலாக மழை முகில்கள் தென்பட்டால் அதை செயற்கையாக கட்டுப்படுத்தி திசை மாற்றிவிடுவதும் என ஒரு தனியார் சேவையாக இந் நாடுகளில் இடம்பெற்று வருவதும் சிறப்பம்சமாகும்.

துபாயின் தேசிய வானிலையில் நிலையத்தின் அறிக்கையிடலின்படி மழை தொடங்க முன் ஆறு அல்லது ஏழு முகில் விதைப்பு விமானங்கள் துபாய் வான் பரப்பு முழுவதும் இயக்கப்பட்டுள்ளமை இச் சந்தேகத்தை மேலும் உறுதிப்படுத்துவதாக அமைந்தது. இச்செயற்கை மழை முறைமை தடை செய்யப்பட வேண்டும் என்றும் இனி மேல் இப்படியான அனர்த்தங்களை தோற்றுவிக்கும் தவறுகளை அரசாங்கம் மேற்கொள்ளக்கூடாது என்றும் பல இணைய வழிக் குரல்கள் பரவலாக எழுப்பப்பட்டன.

எனினும் 15 km வரை உச்சம் கொண்ட நான்கு பெரிய புயல்கள் அரேபிய தீபகற்பத்தின் வளிமண்டலத்துக்குள் ஒன்றன்பின் ஒன்றாக நுழைந்து வலுப்பெற்றதாக BBC இன் வானிலை முன்னறிவிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த புயல் ஆனது செவ்வாய் அன்று ஐக்கிய அரபு இராச்சியத்தை தாக்குவதற்கு முன் ஞாயிற்றுக்கிழமை அன்று ஓமானில் நிலை கொண்டிருந்தது.. மேலும், அனர்த்தத் துக்கான காரணம் முழுக்க முழுக்க காலநிலை மாற்றம் தான் முகில் விதைப்பு முறைமை அல்ல என துறை சார் நிபுணர்கள் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.



இணையவழி தரவுகள் தவறெனவும், ஞாயிறு மற்றும் திங்களில் மட்டுமே செயற்கை மழை விமானங்கள் ஏவப்பட்டதாகவும், வெள்ளம் ஏற்பட்ட தினமான செவ்வாய் அன்று அவ் விமானங்கள் இயக்கப்படவில்லை எனவும் நிபுணர்கள் மேலும் தெரிவித்தனர்.

"மேக விதைப்பு மூலம் அது நிகழ்ந்திருந்தால், அவற்றுக்கு எல்லா நேரத்திலும் தண்ணீர் இருக்கும்.. மெல்லிய காற்றில் இருந்து மழையை உருவாக்கி 152.4 mm நீரைப் பெற முடியாது, "என்று அமெரிக்க தேசிய கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகத்தின் முன்னாள் தலைமை விஞ்ஞானி ரியான் மாவ் கூறியுள்ளார்.

புவி வெப்பமடைதலின் விளைவாக துபாயைச் சுற்றியுள்ள கடல்களில் அசாதாரணமாக வெதுவெதுப்பான நீர் உள்ளது, அங்கு மேலே மிகவும் சூடான காற்று உள்ளது. இது சாத்தியமான ஆவியாதல் விகிதங்கள் மற்றும் அந்த நீரை வைத்திருக்கும் வளிமண்டலத்தின் திறன் ஆகிய இரண்டையும் அதிகரிக்கிறது. இது துபாயில் நாம் பார்த்ததைப் போன்ற பாரிய மழைப்பொழிவை அனுமதிக்கும் ஒரு காரணியாக அமைந்துவிடுகிறது."



என்று ஆஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் காலநிலை, ஆற்றல் மற்றும் பேரழிவுத் தீர்வுகளுக்கான நிறுவனத்தின் இயக்குனர் மார்க் ஹவ்டன் கூறியுள்ளார்.

அறிக்கைகளின்படி, அரேபிய தீபகற்பத்தின் குறுக்கே பல நாட்களாக ஓமான் வளைகுடாவில் மெதுவாக நகரும் புயலின் விளைவாகவே கடுமையான மழை பெய்தது. இந்த புயல் பூமத்திய ரேகைக்கு அருகில் இருந்து ஏராளமான வெப்பமண்டல ஈரப்பதத்தை கொண்டு சென்று அப்பகுதியின் மீது அதிக அளவில் வெளியிடுகிறது.

சில நாட்களுக்கு முன்பே முன்னறிவிப்பு மாதிரிகளிலும் புயல் தோன்றி இருப்பது இத்துறை சார் நிபுணர்களின் விளக்கத்தை மேலும் உறுதிப்படுத்துவதாக உள்ளது.

தமிழ்நாட்டின் வானிலை மனிதன் பிரதீப் ஜான் விளக்கமளிக்கையில்,

ஏப்ரல் 15 மற்றும் 16 ம் திகதிகளில் துபாயில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக பல்வேறு சர்வதேச வானிலை ஆய்வு மையங்களும் முன்னெச்சரிக்கைகளை கொடுத்திருந்தமையானது, இவ் அனர்த்தத்துக்கு முகில் விதைப்பு முறைமை காரணம் இல்லை என்பதை எடுத்துக் காட்டுவதாக கூறியுள்ளார்.

2000 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை தெற்கு அரேபிய தீபகற்பத்தில் கிட்டத்தட்ட 100 நிகழ்வுகளின் பகுப்பாய்வுகளை உள்ளடக்கிய ஒரு சமீபத்திய ஆய்வை அவர் மேற்கோள் காட்டிய ரீடிங் பல்கலைக்கழக வானிலையியல் பேராசிரியர் சுசான் கிரே, "இது போன்ற பெரிய வெப்பமண்டல புயல்கள் மத்திய கிழக்கில் அரிதான நிகழ்வுகள் அல்ல" என்று கூறியுள்ளார். மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் துபாயில் 9.4 அங்குலங்கள் (கிட்டத்தட்ட 240 மிமீ) வீழ்ச்சியடைந்த புயல் சில மணிநேரங்களில் துபாயில் நாட்டம் கொண்டது.


மனிதனால் ஏற்படும் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பு நிலைமைகள்தான், உலகம் முழுவதும் தீவிர மழை உட்பட தீவிர வானிலை நிகழ்வுகளுக்கு வழிவகுக்கிறது என்று காலநிலை விஞ்ஞானிகள் விளக்கமளிக்கின்றனர்.

"சமீப நாட்களில் ருயுநு இல் காணப்பட்டதைப் போன்ற இடியுடன் கூடிய மழைவீழ்ச்சி நிலைமையானது, வெப்பமயமாதலுடன் ஒரு குறிப்பிட்ட வலுவான அதிகரிப்பைக் காட்டுகிறது. ஏனெனில், இடியுடன் கூடிய காற்றோட்டமானது, வெப்பமான இன்றைய உலகில் இன்னும் வலுப்பெறுகிறது" என்று Vrije Universiteit Amsterdam இன் காலநிலை உச்சநிலை பேராசிரியரான Dim Coumou கூறியுள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக உலகத்தின் வெப்பநிலை அதிகரித்துக் கொண்டு வருவதாகவும் கடந்த இரண்டு ஆண்டுகளில் பிரிட்டனில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, பாகிஸ்தானில் ஏற்பட்ட திடீர் மழை போன்ற சீற்றங்கள் வெப்ப நிலை அதிகரிப்பு காரணமாக இடம் பெற்றவை எனவும் இவை அனைத்தும் உலகின் காலநிலை மாற்றத்தை உணர்த்தக் கூடியதாக உள்ளது எனவும் வானிலை வல்லுனர்கள் தெரிவிக்கின்றனர்.. 22 ஆண்டுகளுக்கு பிறகு இன்னும் அண்மையில் இந்தோனேசியாவில் ஏற்பட்ட 5.0 ரிச்டர் நிலநடுக்கத்தின் பின்னர் அங்குள்ள எரிமலை ஒன்று வெடித்து சிதறத் தொடங்கி இருக்கிறது. அங்குள்ளவர்களுக்கு சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருக்கிறது.

உலகில் ஒரு புறம், நாடுகளுக்கு இடையில் சர்வாதிகாரம், பயங்கரவாதம், தீவிரவாதம் மற்றும் அவற்றுக்கு எதிரான போர்கள், இன்னும் வேலையின்மை, வறுமை என எத்தனையோ பிரச்சனைகள் போய்க்கொண்டிருந்தாலும் அவை எல்லாவற்றையும் விட முக்கியமான பிரச்சனையாக இந்த காலநிலை மாற்றம் தோற்றம் பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது.

உலகம் முழுக்க ஒவ்வொரு பகுதியும் இந்த காலநிலை மாற்றத்தினால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபை கூட இக்கால நிலை மாற்றம் குறித்து கடுமையான எச்சரிக்கைகளை விடுத்த வண்ணம் உள்ளது. மீண்டும் சரி செய்ய முடியாத தவறுகளை



மனித சமுதாயம் தற்போது முன்னெடுத்து வருவதாகவும், உலகின் வெப்பநிலை அடுத்த 20 ஆண்டுகளில் 1.5°C இனால் அதிகரிக்கவுள்ளதாகவும், இனிமேல் இவ்வுலகம் பூராக வாழும் மக்கள் இயற்கை அனர்த்தங்களுக்கிடையில் தான் வாழ வேண்டும் எனவும் Intergovernmental Panel on Climate Change (IPCC) எச்சரித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## மனநலமும் ஆலோசனையும் 27

# எண்ணங்கள்

பகுதி - 1

பலவிதமான எண்ணங்கள் எமக்குள் வருவதை நாம் அன்றாடம் உணர்கிறோம். எண்ணங்கள் மனதில் நடைபெறும் ஒரு செயல்முறையாகும். தகவல்களைக் கையாளுதல்,
கருத்துக்களை உருவாக்குவதல்,
சிக்கல் தீர்த்தல்
காரணங்கள் கண்டறிதல்
முடிவுகள் எடுத்தல்
போன்ற பலவற்றை உள்ளடக்கியதாக எமது எண்ணங்கள் செயற்படுகின்றன.

ஒவ்வொரு நாளும், நம் மனதில் எண்ணங்கள் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடுகின்றன. சாதாரணமாக எமது அன்றாடப் பணிகள் முதல் நம்மைச் சுற்றியுள்ள உலகம் பற்றிய பல விடயங்கள் எண்ணங்களாக உருவாகின்றன.

நம்மைப் பற்றியும் நம்மைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றியும் நமது கருத்துக்கள், விருப்பங்கள் மற்றும் நம்பிக்கைகள், அனுபவங்கள் போன்றவற்றின் உள்ளடக்கமாக எமது எண்ணங்கள் இருக்கின்றன.

எந்த ஒரு சூழ்நிலைக்கும் அல்லது அனுபவத்திற்கும் நாம் கொண்டு வரும் முன்னோக்குகள் இதில் அடங்கும்.

அவை நல்லதாக, மோசமானதாக அல்லது நடுநிலையானதாக எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்.

ஆய்வுகள் கூறுவதைக் காணலாம்.

எண்ணங்கள் ஒரு மௌனமான மொழி என சொல்லப்படுகிறது.



சராசரியாக ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு சுமார் 60,000 வரையிலான எண்ணங்கள் உருவாகின்றன என்று

இவை ஒரு அமைதியான பேச்சாக அல்லது சுய தொடர்பாக அதாவது நாமே எம்முடன் உரையாடும் உள்மொழியாக எங்களுக்குள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

---

அருவிக்கரை



நாச்சியாதீவு பர்வீன்

# அவதானத்துக்குரிய ஈழத்து கதைச் சொல்லி சப்னாஸ் ஹாசிம்

- வி.எம்.ரமேஸ் -

அற்புதமான வாசிப்பு அனுபவம். கிழக்கில் இருந்து எப்படி ஒரு படைப்பு வெளிவரவேண்டும் என்று நீண்ட நாட்களாக எதிர்ப்பார்த்திருந்தேனோ அப்படியொரு படைப்பு வெளிவந்திருக்கிறது. அண்மைய காலத்தில் மிக அவதானத்துக்குரிய ஈழத்து கதைச் சொல்லியாக சப்னாஸ் ஹாசிமை சொல்லுவேன். வல்லினத்தில் நவீன் சப்னாஸின் படைப்புக்கள் பற்றி எழுதியிருந்த குறிப்பொன்றும் அது சார்ந்தே இருந்தது. ஒருமுறை வனம் இதழ் ஏற்பாடு செய்த அக்கரைப்பற்று இலக்கிய கூடுகையிலும் கிழக்கின் மூத்த எழுத்தாளுமை திரு ஆர். எம்.நௌஸாத்திடமும் இந்த எதிர்ப்பார்ப்புடன் என் கேள்வியையும் முன் வைத்தேன்

”ஐயா கிழக்கில் இருந்து வெளிவரும் அண்மைய கால படைப்புக்களில் பெரும்பான்மையான புனைவுகளாக இருக்கட்டும் கவிதைகளாக இருக்கட்டும் ஏன் மாயாஜாலமிக்கதாக காணப்படுகின்றது.அவை அந்தரத்தில் பறப்பதை போல இருக்கிறது வாசிக்க. சாதாரண மக்கள் பற்றிய சராசரியான வாழ்வியலை யதார்த்தமாக காட்டக்கூடிய எழுத்துக்களாக அவை இல்லையே இதை பற்றிய உங்கள் கருத்தென்ன?” என்று கேட்டிருந்தேன் அந்த கேள்வியின் உள்ளர்த்த எதிர்பார்ப்பை, திருப்தியை எழுத்தாளர் திரு சப்னாஷ் தாராளமாக தந்திருக்கிறார். ஈழத்து இலக்கிய உலகில் மிக பெரிய நடப்பில் எழுதி கொண்டிருக்கும் படைப்பாளு மைகளின் முதன்மையாக வைத்து சப்நாஷை நிச்சயம் பார்ப்பேன்.


ஆரோக்கியமான வளர்ச்சியின் ஆரம்பத்தை முதல் படைப்பிலேயே அறிந்து கொள்ளலாம். அப்படிதான் இதுவரை இலக்கிய உலகம் கண்டிருக்கிறது. ஒரு வாசகனாக ஏன் முதல் தொகுப்பிலேயே இவ்வளவு பெரிய நம்பிக்கை என்றால் தன் கருவிற்கு ஏற்றாற் போல புனைவு கலையை கையாண்டிருக்கும் அழகு செழுமையானது. கதையோடு இருக்கக்கூடிய சூழலை புகைப்படம் போல காட்டமுற்பட்டிருப்பார். சின்னச் சின்ன தடுமாற்றங்கள் இருக்கிறது. தொடர்ந்து மாறலாம். ஆனாலும் அது ஒரு கவிதை துண்டத்தின் ஆரம்பத்தை வாசிப்பதைப் போல இருப்பதனால் விமர்சனம் இல்லை.

ஆர்காலி என்கிற கதையில் வரும் சதகத்தும்மாவை வாசிக்கும் போது அஞ்சுவண்ண தெரு நாவலில் வரும் “ மம்மத்தும்மா ஞாபகம் வருகிறார் சதகத்தும்மா இருக்கும் இடங்களில் எல்லாம் அவளை சூழ்ந்து நிகழ்வதை காட்டும் போதாக இருக்கட்டும் பந்தல் சிறுகதையில் வாப்பாவை பற்றி பேசும் சூழலாக இருக்கட்டும் இயல்பாக இருக்கும் இதை எல்லா கதைகளிலுமே பார்க்கலாம். பந்தல் கதையில் ஈனா காவென்ன என்றொரு பாத்திரம் வரும் மீரானின் துறைமுகம் என்கிற நாவலில் சீனாதானா என்றொரு பாத்திரம் வரும். கிட்டத்தட்ட இந்த இரண்டு பாத்திரங்களோடும் சேர்ந்து பயணிக்கும் சந்தர்ப்பமும் இஸ்லாமிய சமுகத்துடனான வாழ்வியலும் லாவகமாக அந்த மொழி மீதான அழுத்தம் வாசிக்கும் போது ஏற்படுத்தவில்லை. ஒவ்வொரு கதைகளை வாசிக்கும் போதெல்லாம் இஸ்லாமிய மொழி நடைகளை சந்திக்கும் ஞாபகங்களோடு பஷீ ரின் நாவலொன்றில் “எங்க உப்பப்பாவுக்கொரு ஆனையிருந்தது ரொம்ப பெரிய கொம்பானே ... என்று ஒரு பேத்தி பாத்திரம் அந்த குறுநாவல் முழுக்க சொல்லிக்கொண்டிருக்கும் இந்த வார்த்தையை கதைகள் முழுக்க இயல்பாகவே சொல்லிக்கொண்டிருந்தேன்பஷீரின் மக்கள் மொழியும் சப்னாஷ் பேசும் மக்கள் மொழியும் இருவேறாக அழைத்து செல்லவில்லை. ஒவ்வொரு கதைகளும் பேசும் மொழியும் அவ்வளவு அணுக்கமானது வாசகனுக்கு.

சமுகத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் ஒடுக்கப்பட்டவர்கள் ஒதுக்கப்பட்டவர்களை கதைக்குள் கொணர்ந்து நிறுத்துவது இவரின் அலாதி கலை. ஆர்கலி சிறுகதையில் பெரியப்பா,“பந்தல்“ லில் அப்பா, சிருஷ்டியுலகம் சிறுகதையில் ஆயிஷா, உதரலில் இஸ்லாமிய மாணவர்கள் என்று எல்லா கதைகளிலும் ஒவ்வொருவரை காட்டி செல்லாம். ஆயிஷா என்கிற பாத்திரம் இடம்பெறும் “சிருஷ்டியுலகம்“ மிக அற்புதமான கதை. காற்றில் உதிரும் ஒரு இலை பற்றி நாம் கண்டடைவது இல்லயே அதுபோல் தான் ஆயிஷா என்கிற கதையும் அந்த கதை தாங்கி நிற்கும் பாத்திரத்தின் இயல்பும் அப்படியான உணர்வுகளையும் தன் கதைக்குள் கண்டடைகிறார் ஆசிரியர்.

ஒவ்வொரு கதைகளிலும் ஈரம் இருக்கிறது உயிர் இருக்கிறது எப்போதுமே இந்த கதைகள் வாசகனை விடக்கூடியதல்ல. சப்னாஸ் சொல்லும் கதைகளில் மெலிந்த அரசியல் இருக்கிறது மிக மெலிதென்றதால் என்னமோ அது ஆழமாக இறங்குகிறது. அவர் பேசும் மக்கள் சார்ந்த வாழ்வியலும் அதை ஒட்டி நிற்கும் அரசியல் பக்கச்சார்பற்றது ஒரு புகைப்படம் செய்யும் கடமையை அவரின் எழுத்து செய்கிறது ஒவ்வொரு கதையிலும் கையாண்டிருக்கும் கதை கருவும் சூழலும் அதை தாராளமாக நிகழ்த்தி காட்டுகிறது

“பிரேமகலகம்“ தொகுப்பில் இருக்கக்கூடிய இன்னுமொரு சிறப்பம்சம் ஒவ்வொரு கதையின் ஆரம்பமும் அது முடியும் இடங்களிலும் அபாரமானதாக இருக்கும் “ சென்ட்ரல் யூனியன் கோப்ரட்டி“, “சிருஷ்டியுலகம்“ போன்ற கதைகளில் அவற்றை தனித்துவமாக கண்டுணரலாம். இலங்கையில் கடந்த 10 வருடங்களுக்குள் வெளிவந்திருக்கும் தொகுப்புக்களில் மிக சிறந்த தொகுப்புக்களில் ஒன்றாக இத்தொகுப்பை சொல்லலாம் ஆனால் இலங்கையில் இருக்கக்கூடிய எழுத்தாளர்கள் யாருமே இந்த தொகுப்பை சிலாகித்ததாகவோ விருதுகளுக்கு பரிந்துரைத்ததாகவோ காணக்கிடைக்கவில்லை குறிப்பாக கிழக்கிழங்கையிலும் கூட.




---

# சின்ன மகனின் சிரிப்பு

நீள இரவின் இடைநடுவில்
நித்திரை கலைந்து எழுந்தமர்ந்து
பாலமு தூட்டும் தாய்முகத்தை
பார்த்து நானும் விழித்திருப்பேன்

பசியால் உடலம் மிகவதங்கி
புசிக்கத் தயாராய் அமர்கையிலே
விசையாய் என்னை ஈர்த்துவிடும்
வீறிட் டழுமென் சிறுகுழந்தை

கடமைக் காக அவசரமாய்
காலைக் கடன்கள் முடிக்கையிலே
நடக்கும் குறும்பை இரசித்தபடி
நேரம் தவறித் தவித்திடுவேன்

புத்தக மொன்றைக் கரமெடுத்து
படிக்க எண்ணம்
கொள்கையிலே
“அத்தான் இவனைப் பாருங்கள்“
அன்பாய்ச் சொல்வாள்
மனைவியவள்

வாழ்க்கைப் பாதை வழமைகள்
விலகிப் போகும் வேதனைகள்
சூழ்ந்த போதும் சின்னமகன்
சிரிப்பில் உலகை மறந்திடுவேன்...

திக்குவல்லை கமால்

# வெளிநாட்டு தூதுவர்கள் பங்கேற்ற சித்திரைப் புத்தாண்டு நிகழ்வு

சிங்கள, தமிழ் புத்தாண்டை முன்னிட்டு இலங்கை வெளிவிவகார அமைச்சினால் அதன் ஊழியர்கள் மற்றும் இலங்கைக்கான இராஜதந்திர தூதரக ஊழியர்களுக்காக,

நேற்று (20) சனிக்கிழமை கொழும்பில் உள்ள "பொலிஸ் பார்க்" மைதானத்தில் நடாத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வில், இலங்கைக்கான சவூதி அரேபிய தூதரகமும் பங்குபற்றியது.

சவூதி தூதரகத்துக்காக ஒதுக்கப்பட்ட கூடாரத்தொகுதியானது இராச்சியத்தின் விஷன் 2030 மற்றும் சவூதி அரேபியாவின் பல்வேறு துறைகளிலுமான தற்போதைய மறுமலர்ச்சியை பிரதிபலிக்கும் வகையில் அமையப் பெற்றிருந்தது. இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் ஊழியர்கள் மற்றும் இந்திகழ்வில் பங்குபற்றியவர்களுக்கு சவூதி தூதரகம் மதிய உணவும் வழங்கியது.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மதிப்புமிக்க பரிசுகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, பிரதித் தூதுவர் அப்துல்லா அர்கூபி மற்றும் இலங்கைக்கான இராஜதந்திர தூதரகங்களின் தலைவர்கள் பங்கேற்றனர்.



























பயாஸா பாஸில்

# வாழைப்பழங்கள் அழுகிப் போகின்றனவா..?!

## இதோ சில டிப்ஸ்...

வாழைப்பழம் ஏழைகளின் ஆப்பிள் என்று அழைக்கப்படுகிறது. வாழைப்பழம் மலிவான விலையில் கிடைக்கக்கூடிய ஊட்டச்சத்து நிறைந்த பழம். எனவே தினமும் ஒரு வாழைப்பழம் உட்கொள்ள மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர். தவிர, இதில் உள்ள இரும்பு, நார்ச்சத்து மற்றும் ஆக்ஸிஜனேற்றங்கள் சிறுநீரகம், செரிமான அமைப்பு மற்றும் இதயம் போன்ற உறுப்புகளைப் பாதுகாக்கின்றன. இருப்பினும், வாழைப்பழத்தில் ஒரு பெரிய பிரச்சனை என்னவென்றால், அது விரைவில் அழுகத் தொடங்குகிறது, எனவே நீங்கள் வீட்டில் வாழைப்பழங்களை டஜன் கணக்கில் வாங்கி வைத்திருந்தால் அது அழுகிவிடும் என்பதற்காகவே சீக்கிரமே சாப்பிட்டுவிட வேண்டும். ஆனால் இனி அப்படியான கவலை தேவையில்லை. இந்த டிப்ஸ் தெரிஞ்சுக்கிட்டா நீண்ட நாட்களுக்கு வாழைப்பழங்களை ஃபிரெஷாக வைத்திருக்கலாம்.

1 - வாழைப்பழங்களை கடைகளில் தொங்க விடுவதுபோல் வீட்டிலும் கயிறு கட்டி தொங்கவிடுங்கள். அவ்வாறு தொங்கவிட்டால் சீக்கிரம் கெட்டுப் போகாது.

2 - வாழைப்பழம் குளிர்சாதன பெட்டியில் வைத்தாலும் புதியதாக இருக்கும். ஆனால் ஃப்ரிட்ஜில் வைப்பதற்கு முன் வாழைப்பழத்தை காற்றுப்புகாத கவரில் அடைத்து வைக்க வேண்டும்.

3 - வாழைப்பழங்களை பிளாஸ்டிக் ரேப்பிங்கில் சுற்றி வைப்பதும் பழங்களை அழுகாமல் வைத்திருக்க உதவும். காற்று நுழைவதைத் தடுக்க வாழைப்பழங்களை ஒரு மூடியால் மூடி வைக்கவும். இப்படி செய்வதால் வாழைப்பழம் ஃபிரெஷாக இருக்கும்.

4 - வாழைப்பழங்களை காற்றோட்டமான இடத்தில் வைத்தால், அவை நீண்ட நாட்களுக்கு அழுகாமல் இருக்கும்.

# சிகரம் தொட....!!!

நல்ல நட்புகள் எமது வாழ்வில் என்றும் சிறந்தவற்றை செய்வதற்கு துணையாய் அமையுமென்பேன்.

நிச்சயமாய் நல்ல நட்புக்களின் ஆதரவால் சிகரத்தை தொட்டுவிடலாம். இன்ஷா அல்லாஹ்..! அந்த வகையில் நல்ல நண்பனோ நண்பியோ நல்ல வழிகாட்டியாக அமையலாம். ஈமானை அதிகப்படுத்தும் விடயங்களில் உதவலாம். முன்னேற்ற படிகளுக்கு துணையாய் அமையலாம். எமது எல்லா காரியங்களிலும் உறுதுணையாக நிற்கலாம்.

விட்டு விடாதீர்கள். பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். அவ்வாறான நட்புகளை நாளும் கொண்டாடுங்கள். கனிவாகப் பேசுங்கள். உண்மையாக இருங்கள். அன்பை அள்ளிக் குவியுங்கள். மகிழ்ச்சிப்படுத்துங்கள். சின்ன சின்ன அன்பளிப்புக்களால் ஆட்சி செய்யுங்கள். ஒற்றுமையாய் வாழுங்கள்.. உங்கள் நட்பு உங்களையும் கொண்டாடும்...!!!

# என் சுப்பர் ஹீரோ சனத், கிரிக்கெட்டிற்கு விரைவில் விடை கொடுக்கவுள்ளேன்

## - சாதனைப் பெண் சமரி அத்தபத்து -



அரபாத் பஹுர்தீன்



கிரிக்கெட்டில் எனது ஹீரோ மாஸ்டர் பிளாஸ்டர் சனத் ஜெயசூர்யா என்றும் , மிக விரைவில் சர்வதேச கிரிக்கெட்டிற்கு விடை கொடுக்க உள்ளதாகவும் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவரான சமரி அத்தபத்து தெரிவித்துள்ளார்.

34 வயதான இடது கை ஆரம்பத் துடுப்பாட்ட வீராங்கனையும், வலதுகை சுழற்பந்து வீச்சாளருமான இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் தலைவியான சமரி அத்தபத்து கடந்த 17ஆம் திகதி தென்னாபிரிக்க மகளிர் அணிக்கு எதிராக இடம்பெற்ற 3ஆவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் 195 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுக்க இலங்கை அணி 302 ஓட்ட இலக்கை மிக இலகுவாக அடைந்து மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக ஓட்டங்களை பதிலளித்துப் பெற்ற அணி என்ற உலக சாதனை வெற்றியைப் பதிவு செய்திருந்தது.

மேலும் உலக கிரிக்கெட் வரலாற்றில் 2ஆவதாக துடுப்பெடுத்தாடிய அணி சார்பில் அதிக ஓட்டங்களைப் பெற்ற கிரிக்கெட் வீர , வீராங்கனைகளில் சமரி அத்தபத்து பெற்றுக் கொண்ட 195 ஓட்டங்கள் 2ஆவது இடத்தில் பதிவாகியுள்ளது. இதன் முதல் இடத்தில் கடந்த ஆண்கள் ஒருநாள் உலகக்கிண்ண தொடரில் ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிராக மெக்ஸ்வெல் பெற்றுக் கொண்ட இரட்டைச் சதம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் சமரி அத்தபத்து பெற்ற ஆட்டமிழக்காத 195 ஓட்டங்கள் மகளிர் ஒருநாள் கிரிக்கெட்டில் பெறப்பட்ட 3ஆவது அதி கூடிய ஓட்டங்களாகும். இதற்கு முன்னர் 2018ஆம் ஆண்டு நியூசிலாந்து வீராங்கனையான அமேலியா கர் 232 ஓட்டங்களையும், அவுஸ்திரேலிய வீராங்கனையான பொலின்டா க்ளாக் 1997 ஆம் ஆண்டு பெற்ற 229 ஓட்டங்கள் முதல் இரு இடங்களில் உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

இவ்வாறு பல சாதனைகளை தன்னகத்தேயும், தான் தலைமை தாங்கும் அணிக்கும் பெற்றுக் கொண்ட சமரி அத்தபத்து ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்து வெளியிட்டார், " உலகக் கிண்ண தொடரின் அரையிறுதியில் எனது அணியைப் பார்க்க விரும்புகிறேன், கடந்த 15 ஆண்டுகளில் நான் மிகவும் கடினமாக உழைத்தேன், ஒரு வீரராக சில விஷ யங்களைச் சாதித்துள்ளேன், ஆனால் ஒரு கேப்டனாக, நான் இன்னும் பலவற்றைச் செய்ய விரும்புகிறேன்.

அதுவே எனது விருப்பம் மற்றும் இந்த தென்னாப்பிரிக்கா தொடர் நிகழ்ச்சிகள் எங்களுக்கு பெரிய ஊக்கத்தை அளித்தது. இது எங்களுக்கு மிகவும் பெரிய பணி என்று எனக்குத் தெரியும், ஒவ்வொரு அணியும் மிகவும் நன்றாக இருக்கிறது, ஒவ்வொரு ஆட்டமும் எங்களுக்கு முக்கியம்.

ஒரு நேரத்தில் ஒரு ஆட்டத்தில் கவனம் செலுத்துவோம். எனது ஓய்வை மிக விரைவில் அறிவிப்பேன். ஆனால் இப்போது என்னால் எப்போது என்ற திகதியை குறிப்பிட முடியாது, ஆனால் மிக விரைவில் அது நடக்கும். இவற்றைப் பற்றி பிறகு பேசலாம். இப்போதைக்கு, நான் எப்போதும் இளம் பெண்களை கவனித்துக்கொள்கிறேன்.

நான் ஒரு இளம் அணியை உருவாக்கியுள்ளேன். இந்த இளம் பெண்களை ஒரு நாள் உலகக் கிண்ணத் தொடரில் பார்க்க விரும்புகிறேன். ஒரு அணித்தலைவராக, எனது இளம் பெண்களைப் பற்றி நான் மிகவும் பெருமைப்படுகிறேன், அவர்கள் நன்றாக கிரிக்கெட் விளையாடுகிறார்கள். கடந்த 15 வருடங்களில் இலங்கை கிரிக்கெட்டுக்காக நிறைய விஷ யங்களை தியாகம் செய்துள்ளேன்.

இந்த அணியை வழிநடத்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன். நான் ஒரு பெருமைமிக்க அணித்தலைவி . எனது பெண்கள் எதிர்காலத்திலும் நன்றாக கிரிக்கெட் விளையாடுவார்கள் என்று நம்புகிறேன். ரி20 உலகக் கிண்ண தொடரில் எனது அணி சிறந்த கிரிக்கெட்டை விளையாடும் என நம்புகிறேன்." என்றார்.

மேலும் சமரி அத்தபத்துவிற்கு இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துக்களை கூறியிருந்ததுடன் இலங்கை அணியின் முன்னாள் நட்சத்திரங்களான மஹேல ஜெயவர்த்தனே, லசித் மலிங்க மற்றும் சமரியின் "சூப்பர் ஹீரோ" சனத் ஜெயசூரிய ஆகியோர் வாழ்த்துக்களை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இம்மாதம் 25ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐசிசி ரி20 தகுதிச் சுற்றுப் போட்டியில் பங்கேற்பதற்காக சமரி அத்தபத்து தலைமையிலான இலங்கை மகளிர் அணி நேற்று முன்தினம் தென்னாபிரிக்காவில் இருந்து டுபாய் சென்றடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# எப்.ஏ கிண்ண உதைப்பந்தாட்டம்:

## யுனைட்டடிடம் தோற்று நடையைக் கட்டியது லிவர்பூல்

உலகப் புகழ் பெற்ற எப்.ஏ கிண்ண உதைப்பந்தாட்ட தொடரின் காலிறுதி ஆட்டத்தில் மென்செஸ்டட் யுனைட்டட் அணியிடன் 4:3 என்ற கோல்கள் அடிப்படையில் போராடித் தோற்றது லிவர்பூல் அணி.

நடப்பாண்டில் எப். ஏ உதைப்பந்தாட்டத் தொடர் இங்கிலாந்தின் முன்னனி மைதானங்களில் இடம்பெற்று வருகின்றது. இதில் இடம்பெற்ற தீரக்கமான காலிறுதி ஆட்டத்தில் பலமிக்க அணிக்கான லிவர்பூல் மற்றும் மான்செஸ்டட் யுனைட்டட் ஆகியன ஓல்ட் ட்ரபோர்ட் மைதானத்தில் மோதின.

போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் லிவர்பூல் அணி ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் யுனைட்டட் வீரர் மெக்டோமினை அடித்த கோலுக்கு லிவர்பூல் வீரர்களான அலிஸ்டர் 44ஆவது நிமிடத்திலும், முஹம்மது சலாஹ் 45ஆவது நிமிடத்திலும் கோலை அடித்துக் கொடுக்க முதல் பாதியில் 2:1 என முன்னிலை பெற்றது லிவர்பூல் அணி.

# நாச்சியாதீவு வொரியர்ஸ் இறுதியாட்டத்திற்கு தெரிவு!



அனுராதபுர மாவட்ட உதைப்பந்தாட்ட சம்மேளனத்தால் 2023ஃ2024 வருடத்திற்கான ட பிரிவு உதைப்பந்தாட்ட லீக் போட்டியில் நாச்சியாதீவு வொரியர்ஸ் உதைப்பந்தாட்டக் கழகம் இறுதியாட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த லீக் போட்டியில் வொரியர்ஸ் அணி 5 போட்டிகளில் விளையாடி எந்த வித தோல்விகளையும் சந்திக்காது இறுதியாட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாச்சியாதீவு வரலாற்றில் ஒரு அணியானது அனுராதபுர உதைப்பந்தாட்ட சங்கத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது அணியாகவும் சங்கத்திற்கௌகு தெரிவு செய்யப்பட்டு முதலாவது வருடத்திலே இறுதியாட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டதும் இதுவே முதல் முறையாகும். அண்மைக் காலமாக நாச்சியாதீவு வொரியர்ஸ் அணியானது பல்வேறு வெற்றிகளை பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

வொரியர்ஸ் உதைப்பந்தாட்ட அணியின் வெற்றியின் பின்னணியில் பயிற்றுவிப்பாளர்களான சஹீல் அஹமட் மற்றும் மொஹமட் அப்ரித் செயற்படுவது குறிப்பிடத்தக்கது.

# "கல்பிட்டி புட்போல் லீக் - 2024" சம்பியன் மகுடம் வென்றது கல்பிட்டி யுனைடட்

"கல்பிட்டி புட்போல் லீக்" தொடரின் இறுதிப் போட்டியில் கல்பிட்டி பேர்ல்ஸ் கழகத்தினை 6:5 என்ற பெணால்டி கோல்களின் அடிப்படையில் வீழ்த்திய கல்பிட்டி யுனைடட் கழகம் நடப்பாண்டின் செம்பியன் மகுடத்தினை தனதாக்கி அசத்தியது.

கல்பிட்டி பேர்ல்ஸ் கழகம் ஏற்பாடு செய்திருந்த அணிக்கு 7 பேர் கொண்ட "கல்பிட்டி புட்போல் லீக் - 2024" தொடர் கடந்த 13மற்றும் 14ஆம் திகதிகளில் கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றிருந்தது. இதில் 6 அணிகள் பங்கேற்றன. கடந்த நோன்பு 20இல் 6 அணிகளுக்குமான வீரர்கள் ஏலம் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டனர். அந்தவகையில் பேர்ல்ஸ், யுனைடட், ப்ளஸி கைஸ், வெஸ்ட் ட்ரைகர்ஸ், லேகர்ஸ் மற்றும் ஹைபர் வேல்ஸ் ஆகிய 6 அணிகள் இத் தொடரில் பங்கேற்றன.

இதற்கமைய முதல் சுற்று லீக் போட்டிகளாக இடம்பெற்றன. அதில் ஒரு அணி மற்றைய 5 அணியுடனும் ஒரு முறை போட்டியில் பங்கேற்றிருந்தன. இதில் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் முதல் குவளிபயர் போட்டியில் மோதும். பின்னர் 3ஆம் 4ஆம் இடங்களைப் பிடித்த அணிகள் எலிமினேட்டர் போட்டியில் பங்கேற்று வெற்றி பெறும் அணி முதல் குவளிபயர் போட்டியில் தோல்வியடையும் அணியுடன் 2ஆவது குவளிபயர் போட்டியில் பங்கேற்கும். பின்னர் குவளிபயர் ஒன்றில் வெற்றி பெற்ற அணியும் , குவளிபயர் 2இல் வெற்றி பெற்ற அணியும் இறுதிப் போட்டியில் மோதும் வகையில் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டிருந்தது.



இதற்கமைய இறுதிப் போட்டியில் கல்பிட்டி பேர்ல்ஸ் அணியும், கல்பிட்டி யுனைடட் அணியும் இறுதிப் போட்டியில் பங்கேற்றன. இப் போட்டியின் முதல் பாதி ஆட்டம் விறுவிறுப்பாக அமைந்த போதிலும் இரு அணிகளின் வீரர்களாலும் கோல் கணக்கை ஆரம்பிக்க முடியாமல் போனது. இதனால் முதல் பாதி கோளின்றி சமநிலை பெற்றது. பின்னர் தொடர்ந்த 2ஆவது தீர்மானமிக்க பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் கோலுக்கான முயற்சியில் தீவிரம் காட்டினர். இருப்பினும் இரு அணிகளின் தடுப்பு வீரர்களும், கோல்காப்பாளர்களும் மிகச் சிறப்பாக விளையாட இரண்டாம் பாதியும் கோல்கள் இற்று நிறைவுக்கு வர போட்டி சமநிலையில் முடிந்தது.

இதனால் நடப்பாண்டின் செம்பியனை தீர்மானிக்க பெனால்டி உதை வழங்கப்பட்டது. இதில் முதல் 3 உதைகளையும் இரு அணி வீரர்களும் கோலாக மாற்ற ஆட்டம் மேலதீக பெனால்டி கோல் வரை சென்று இறுதியில் கல்பிட்டி யுனைடட் அணியின் கோல்காப்பாளரான பர்ஹான் இரு கோல்களை தட்டி விட கல்பிட்டி யுனைடட் அணி 6:5 என்ற பெனால்டி கோல்களின் அடிப்படையில் வெற்றி பெற்று செம்பியன் மகுடத்தை தனதாக்கியது.

இத் தொடரின் செம்பியன் அணிக்கு 50,000 ரூபா ரொக்கப் பணமும் வெற்றிக் கிண்ணமும், அத்துடன் 2ஆம் இடம் பிடித்த பேர்ல்ஸ் அணிக்கு 25,000 ரூபா ரொக்கப்பணமும் கிண்ணமும் வழங்கப்பட்டது. அத்துடன் தொடரின் சிறந்த கோல்காப்பாளரான யுனைடட் அணியின் பர்ஹானும், சிறந்த வீரரான ஹைபர் வேல்ஸ் அணியின் அஹதிரும், சறந்த இளம் வீரரான பேர்ல்ஸ் அணியின் ஹிசாமும் தெரிவாகினர். மேலும் இத் தொடரில் அதிக கோல்களை அடித்த வீரருக்கான தங்கக் காலணி விருதை பேர்ல்ஸ் அணியின் முன்கள வீரரான ஜாஹித் தனதாக்கினார்.

அத்துடன் இத் தொடரில் பங்கேற்க கத்தார் நாட்டிலிருந்து விடுமுறை பெற்று வந்து கடந்த 8ஆம் திகதி வபாத்தான 33 வயதான மர்ஹூம் ஐயூப் நுஸ்கான் அவருக்கான நினைவுச் சீறுடை மற்றும் கடந்த 2023ஆம் ஆண்டு பெருநாள் தினம் வபாத்தான பேர்ல்ஸ் அணியின் முன்னாள் வீரரும், கல்பிட்டி பிரதேச சபை முன்னாள் உறுப்பினருமான மர்/ஹம் அக்மலுக்குமான பேர்ல்ஸ் அணியின் நினைவுச் சீறுடையும் வர்களின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதுடன்,செம்பியன் மகுடத்தினை வெற்றி கொண்ட யுனைடட் அணியின் உரிமையாளர் ஹம்தூன் நஜாத்தினால் செம்பியன் கிண்ணம் மர்ஹூம் நுஸ்கானுக்கு சமர்பிக்கும் வகையில் அவரது சகோதரரிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.